ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ॥

வேதாந்த தீபிகை.

ஸம்பாதகர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 19] சுக்ல௵ ஆனி௴ [ஸஞ்சிகை 9

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥

[ஸ்ரீ பாகவதம். 1-9-23]

ஸ்ரீ:

ஸ்ரீமத் அதிகரண ஸாராவளி.

[ஸ்ரீ. உப. வித்வான் ஏ. வி. கோபாலாசார்யர்.]

(ஸஞ்சிகை 7, பக்கம் 202 தொடர்ச்சி)

" ஸ்ரீமத்யாம் ஸ்யாத்ஸவித்ர்யந்வயி வரதார்யாக்யநாமாதநூஜாஹ்வாம்
ஸம்ஜ்ஞாம்ருஷ்டேந ஸத்யம் ஸஹநிசிததியா வேங்கடேசேந க்லுப்த: ।
ஸேவ்யா ஸா ஶாந்திதைத்தை: ஶ்ரவணரஸதயா ஶார்ங்கிணோ ஹாரயஷ்டிவத்ஸா
ஸித்தை: ஶாரீரகார்த்தை: ஸஹஜபஹுகுணை: ஸூத்ரஸூத்ராதிபி:॥ "

"உமக்குப் புதுப்பெயரிட்டார் பெரியபெருமாளென்று சொன்னீர். நல்லது; குழந்தை பிறந்தல்லவா பெயரிடவேணும்? இருக்கிற குழந்தைக் கல்லவா பெயரிட வேணும்? ஸத்தையில்லாத குழந்தைக்கு எப்படி நாமகரணம் செய்வது? நீர் எப்படி ஸத்தானீர்? உம்மை யார் வித்யையால் பிறப்பித்தார்? ஜ்ஞாநம் வருவதற்கு முன் பிறப்பு பிறப்பன்றே! 'அன்று நான் பிறந்திலேன்' என்றல்லவோ பெரியோர் வார்த்தை. இப்படிக் கேள்விகள் வர 'ஸவித்ரீ' என்று ஆசார்ய ப்ராசார்யர்கள் இருவர் என்னைக் கடாக்ஷி

த்து, ‘இவன் உளனாக’ என்று அநுக்ரஹித்து என்னை ஸத்தாக்கினார்கள்” என்கிறார். முன்ச்லோகத்தில் ஸ்ரீயும் ரங்கராஜனும் பெயரை அநுக்ரஹித்தது போல், இவர்களிருவரும் என்ஸத்தா விஷயத்தில் அநுக்ரஹித்தார்கள். முன் ச்லோகத்தில் ஒரு ஸ்ரீமானால் நாமகரணம்; இங்கே இரண்டு ஸ்ரீமான்களால் ஸத்தாநுக்ரஹம் என்று வேடிக்கையாய்க் காட்டப்படுகிறது ‘ஸ்ரீமத்ப்யாம்’ என்கிற பதத்தால். முன் ச்லோகத்தில் ‘தேந தேவேந’ என்று ஏகவசந நிர்த்தேசம். முதலில் ‘ஸூரய:’ என்றும் பிறகு, ‘ஸுஹ்ருத’ என்றும் கூறப்பட்டது. அவர்கள் அநுக்ரஹித்த பிறகுதான் ‘ஸுஹ்ருத’ என்று குறிப்பிட யோக்யதை உண்டாயிற்று என்று பாவம். ‘ஆசார்யவாந் புருஷோ வேத’ என்கிற ச்ருதியிலுள்ள ‘ஸுஹ்ருத’ என்கிற பதத்தைச் சொல்லி அநுக்ரஹித்ததால், இவர் ஆசார்ய பரம்பரையில் ப்ரதாநமாயிருக்கவேண்டும் என்று அவர்கள் பாவம் விளங்குகிறது. இப்படி அவர்கள் ‘ஸுஹ்ருத’ என்று ஆசார்யனாக என்று அநுக்ரஹித்ததால் தான் எனக்கு ஸ்ரீ ரங்கநாதன் வேதாந்தாசார்யனென்கிற நாமம் கொடுத்தான். ‘ஸஹ்ருதய:’ என்பதற்கு ‘ஸுஹ்ருத’ என்று ச்ருதியில் சொல்லப்படும் ‘ஆசார்யனாக ஆகக்கடவன்’ என்றும் பாவம். வேதாந்தாசார்யன் என்று நாமம் கொடுக்க, இவர்கள் யோக்யதையை அநுக்ரஹித்தார்கள் என்றிப்படி பாவம் சொல்வது நன்றாய்ப் பொருந்தும். ஆசார்யர்கள் தேவர்கள். இந்த இரண்டு தேவர்களும் என்னைப் பிறப்பித்து ‘இவன் வேதாந்தாசார்யனாக’ என்று அநுக்ரஹிக்கப்பட்ட எனக்கு அந்தத் தேவன் வேதாந்தாசார்யனென்று நாமம் சாற்றினார். என்னுடைய தேசிகர்களின் ஆதேசத்தை அநுஸரித்து, அவன் எனக்கு இந்தப் பெயரைக் கட்டளையிட்டான். ‘ஸூரய: தேஶிகேந்த்ர ஸஹ்ருதயஸ்ஸ்வ’ என்கிற வார்த்தைகளை அநுஸரித்து ‘ஸஹ்ருதய:’ என்கிற பதங்கள். ‘ஸூரய:’ என்பதை ‘ஸூரய:’ என்றும், ‘ஸ்வம்’ என்பதை ‘ஸுஹ்ருத’ என்றும் மாற்றியிருக்கிறது. ‘ஸ்ரீமத்ப்யாம் ஸஹ்ருதய:’ என்று சேர்த்து அந்வயம் கொண்டால், ‘ஶ்ரியா ஸம்ஹ்ருதயேந தயா தேவேந’ என்கிறபடி ஸ்ரீ பொருந்திய திவ்ய தம்பதிகள் பொருட்டே இவன் ஆளாகக்கடவன் என்று கடாக்ஷிக்கப்பட்டவன் என்று அர்த்தம் கொள்ளலாம்.

‘ஸம்யக் த்ருஷ்டி’ என்று பூர்ண கடாக்ஷத்தின் நன்மையாகிய மஹிமையினால் எல்லாவற்றையும் ஊடுருவிப் பாயத்தக்க கூர்மையான புத்தி உண்டாயிற்றென்பது பாவம். அவர்கள் த்ருஷ்டியின் ஸம்யக்த்வம் புத்தியின் ஸர்வம் ஸஹநிசிதத்வத்தில் ஹேது. ‘த்ருஷ்டி’ என்கிற பதத்தால், பார்த்த மாத்ரத்தில் ஸம்சயங்களெல்லாம் போகின்றன என்று சொல்லும் ச்ருதி காட்டப்படுகின்றது. இவர்கள் த்ருஷ்டி மாத்ரத்தால் என் ஸம்சயங்கள் தொலைந்தன. ‘நிசிதம்’ என்கிற பதத்தினால் உபாஸனையினால் நிசிதமான மநஸ்ஸைச்

சொல்லும் ச்ருதி ஜ்ஞாபிக்கப்படுகிறது. என்னுடைய உபாஸநம் அல்லது நிரந்தர நிதித்யாஸந ச்ரமமில்லாமலும் மநந ச்ரமமில்லாமலும் அவர்கள் கடாக்ஷ மாத்ரத்தால் என் புத்தி நிசிதமாயிற்றென்று ஆச்சர்யம் காட்டப்படுகின்றது. 'வெஂகடேசெஜ' என்ற பெயர் இங்கே எனக்குப் பெரிய பெருமாள் முன்பு நாமகரணம் செய்தது. இந்தப் பெயருடைய எனக்கு வேதாந்தாசார்ய னென்கிற பெயர் கிடைக்கும்படி உள்ள கூர்மையான புத்தியை இவ்விருவர் கடாக்ஷித்தார்கள். 'ஶ்ரூயெ-ஶா வஶஷாய-ஶவாஷஶவிகா உாஶா ந-ஜா அாய-ஶதஃ' என்று ந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் ப்ராசார்ய பாதரஸிகரான ஆசார்யனை அநுஸந்தித்தபடி. இங்கே இருவரையும் சேர்த்து அநுஸந்தாநம். 'கஂளவூ:' என்று இந்த க்ரந்தமாகிய க்ஷீரராசி வேங்கடேசனால் செய்யப்பட்டது. இதில் அம்ருத ஸ்ரீ உண்டாகும். 'ஸெவெஷூாஸஂள' என்றும் 'ஸஷூாஷஸஂள' என்றும் இந்த ச்லோகத்திலும் 'ஸாஸஂள ஸாஸூய' என்று முடிவு பாகத்திலுள்ள ச்லோகத்திலும், 'ஸுஸஂள' என்கிற பதம் உபக்ரமத்திலும் உபஸம்ஹாரத்திலும் ப்ரயோகிப்பதால், இவர்கள் அநுக்ரஹ பதத்தையே புத்தியில் பரிவர்த்தநம் செய்துகொண்டு இந்த க்ரந்தம் செய்யப்பட்டதென்று காட்டுகிறது. தம் விஷயத்தில் அவர்கள் உபயோகித்த 'ஸுஸஂள' என்கிற சப்தத்தை இதே ச்லோகத்திலும் முடிவிலும் இந்த க்ரந்த விஷயத்தில் ப்ரயோகிப்பதால், அவர்களுடைய 'ஸுஸஂள ஸஷூாக' என்கிற அநுக்ரஹம் இந்த க்ரந்தத்தின் ஸித்தி பர்யந்தம் ப்ரவஹித்து இந்த க்ரந்தமாகப் பர்யவஸித்தது என்று வ்யஞ்ஜிக்கப்படுகிறது. 'ஸிஊஷெஷூாஸஂள' என்று மதுரமான ஸித்தௌஷதத்தை ஸேவிப்பதுபோல் இந்த ஸித்தப் பால் ராசியைப் பருகுங்கள் என்று பாவம். 'தூய அமுதைப் பருகிப் பருகி' என்கிற க்ரமத்திலே அந்தப் பாற்கடலை மெல்ல மெல்லப் பாநம் செய்யவேணும். இந்த ரஸத்தைக் காதென்கிற நாக்கினால் ருசி பார்த்து ரஸிக்கவேணும். இவ்விஷயத்தில் காது நாக்காகவேணும். 'ஶ்ரூதிக-ஷஶ கஜூஷெஹாஶ மிஶ:' என்று காதின் தினவை எடுக்கக்கூடியது ராமாயணம் போன்ற மஹர்ஷிகளின் செஞ்சொற்கள். அதைப்போல் இனிமையான க்ரந்தம் வேறில்லை. 'முடியானே' யென்கிற திருவாய் மொழியில் போல் இந்த ஸுதையின் அநுபவத்தில் கரண நையத்யம் இல்லை.

'ஶாஜுஷிஷெ்தஃ' என்று 'ஶாஜுஷூஜ-ஷாஷீத' என்பதுபோல் பூர்வ ஸித்தமான சாந்தியுடன் இதை ஸேவிக்கவேணும். அஸூயா பித்தம் முதலிய வ்யாதிகள் இருந்தால் இந்தப் பாலும் கைக்கும். பித்தத்தினால் நாக்கு விகாரமடைந்தபொழுது சர்க்கரையும் கசக்குமல்லவா என்று ஹம்ஸத்தைப் பார்த்துத் தமயந்தி சொல்லுகிறாள். ஸாதந சதுஷ்டயம் முழுவதும் வேதாந்த விசாரத்திற்கு முன்பே இருக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தம் இல்லையென்று நாம்

204

சொன்னாலும், அவைகளில் அநேக அம்சங்கள் ஸம்பவித்தமட்டும் முன்பே இருக்கவேண்டியதுதான். ‘ப்ராக் ஸித்₃தாய ஸாத்₄வி₃தாய’ என்று உபதேசத்திற்கு முன்பே இருக்கவேண்டியவை சிஷ்ய குணங்கள். அதை அநுஸரித்து சிஷ்ய லக்ஷணத்தில் ‘ஶாந்தோதா₃ந்த ஸ்தி₂திக்ஷு:’ என்று கூறப்பட்டது. இந்தக் குணங்கள் கூடிய மட்டும் முன்பே இருப்பது உசிதம். இந்த அம்சம் சததூஷணியில் ஸாதந சதுஷ்டய வாதத்தில் விசாரிக்கப்பட்டுளது. அதிகாரி வைசித்ரியத்தால் யார்யாருக்கு எப்படி ஸுக்ருத பரிபாகமோ அப்படியிருக்கட்டும். சம தமாதி ஸாதநங்கள் முன்பே இருக்கவேண்டுமென்று சொன்னால் அவச்யமாக வேண்டியவளவில் அதை நிராகரிக்கமாட்டோம். முன்பே சாந்தி ஸித்தித்திருந்தால் ஸித்தித்திருக்கட்டும். சாந்தி பூர்ணமில்லையானால் இந்த வேதாந்தப் பாலை நிஷேவணம் பண்ணிப் பூர்ணம் செய்துகொள்ளலாம் என்று இருவகையாயும் சொல்லப்பட்டது. முதலில் ‘க்லுப்தம்’ என்று தாம் செய்ததாகக் கூறியதைத் திருத்தி, கடைசியில் ‘ஸித்₃த₄:’ என்று கூறுவதால் ‘இது நாம் செய்ததல்ல; இது பெரிய பெருமாளுடைய திருவுள்ளத்தில் ஸித்தமானதை என் வாயால் அவன் சொல்லிவைக்கிறானே யொழிய நாம் சொல்லவில்லை’ என்றும் பாவம். தானே பாஞ்சஜந்ய க்ரமத்தில் என்னைக்கொண்டு இந்த சப்தங்களைச் சொல்லிவைத்துத் தானே ஸந்தோஷிக்கிறான் என்று இந்த அர்த்தம் முடிவில் கூறப்படும். தனக்குள் ஸித்தமானதை என் வாயால் வெளிப்படுத்துவதால் எனக்கு இந்த க்ரந்த கல்பநத்தில் அந்வயமென்று பாவம்.

‘ஶாரீரகார்த்த₂ ஸித்₃த₄: ஸஹஜப₃ஹுகு₃ண:’ என்பதால், சாரீரகத்தில் புருஷார்த்தமான மோக்ஷம் எப்படி ஸஹஜமான குணாஷ்டகங்களோடு ஸித்தமானதோ, அப்படியே அதைச் சொல்லும் இந்த க்ரந்தமும் ஸஹஜமான பஹு குணமுடையதும் ஸித்தமுமானது என்று பாவம். இந்தப் பால் ராசியானது ப்ரயத்நப்பட்டுக் கறந்ததல்ல. இது தானாய்ச் சுரந்தது என்று பாவம். இந்த க்ரந்தம் கல்பித்ததென்று சொன்னாலும் இதன் குணங்கள் ஸஹஜங்கள். ஸ்ரக்தரா வ்ருத்தத்தில் பாடிய இந்த க்ரந்தம் ஹ்ருதயத்தில் வந்துவிட்டால் ‘ஶதம் மாலா ஹஸ்தா:’ என்று சாரீரக ப்ரோக்தமான அர்ச்சிராதி மார்க்கத்தில் மாலையைக் கையில் கொண்டு எதிர்கொண்டு வரும் ஸ்ரக்தரைகளான திவ்ய ஸ்த்ரீகள் எதிர்கொண்டு வருவது திண்ணம். இந்த விஷயம் முடிவில் ‘உத்₃க₃ம்ஶாரீரகோக்தே வர்த்மனி ஸமவநதா: ஸுப்₄ருவ:’ என்கிற ச்லோகத்தால் சொல்லப்படும். அங்கே ‘சாரீரக’ மார்க்கத்தில், என்று சொல்வது போல் இங்கே ‘சாரீரகார்த்தத்தில் ஸித்தமானது’ என்று கூறப்பட்டது. இந்த ஸ்ரக்தரா க்ரந்தம் ஸித்தமானால் அந்த ஸ்ரக்தரைகள் எதிர் கொண்டழைப்

பது ஸித்தமென்று காட்ட ச்லேஷையால் இரண்டும் குறிக்கப்படுகிறது. ‘துக்தாபி:’ என்பதால் தான் கன்றுக்குட்டியாயிருக்க, தன்னைக் கடாக்ஷித்துக்கொண்டே ஆசார்ய ப்ராசார்யர்கள் தங்கள் ஜ்ஞானக்கண்ணாகிய திவ்ய த்ருஷ்டியிலிருந்து அன்பினால் தானே சொரிந்த ஜ்ஞானப்பாலின் ராசி இந்த ஸ்ரக்தரைப் பாட்டாய் ப்ரவஹித்ததென்று பாவம். ஸர்வ உபநிஷத்துக்களும் பசுக்களாகி கறப்பவன் நந்த கோபால நந்தனும், பார்த்தன் கன்றும் ஸுதீகளான ரஸிகர்கள் போக்தாக்களாயும் இருந்து, பெரிய கீதாம்ருதம் துக்தமாயிற்று என்கிற க்ரமத்திலே, இங்கே ஸர்வ உபநிஷத்துக்களும் ஸூத்ரங்களும் பசுக்களாயும், ஸ்வாமி வத்ஸமாயும், த்ருஷ்டி மாத்ரத்தால் கறக்கும் கடாக்ஷங்கள் கோபாலனை நந்தனஞ் செய்யும் இரண்டு பெரியோர்களின் கடாக்ஷங்களாயும், அநுபவிப்பவர்கள் பஹுஜ்ஞர்களான நிபுணர்களாயும், ஜ்ஞானப் பாலாகிய இந்தப்பாசுரங்கள் சொரியப்பட்ட பாலாகவும் நிரூபணம் செய்வதில் இங்கே நோக்கு. ‘காமாந் துக்தே விப்ரகர்ஷத்யலக்ஷ்மீம்’ என்னும் ச்லோகத்தில் போல, இங்கே ‘துக்தம்’ என்பதற்குக் கடாக்ஷங்கள் தானாகச் சுரந்த பால் என்றும் கொள்ளலாம். ‘ச்ருதிவிசிஷ தத்வஸ்ஸாரஸௌஹார்தயுக்தை: பதைர்வதை:’ என்று முடிவில் இந்தப் பாசுரங்கள் ச்ருதி பதங்கள் அமைப்பினால் அலங்கரிக்கப்பட்ட ஸௌபாக்யத்தை உடையனவென்று சொல்லியிருப்பது இந்த அர்த்தத்தில் திருவுள்ளமுள்ளதைக் காட்டுகிறது. ச்ருதப்ரகாசிகை என்கிற அம்ருதஸாகரம், இவர் ப்ராசார்யருடைய உக்திகளும் அநுக்ரஹங்களும் ப்ரவஹித்ததனால் அவதரித்ததென்று வ்யாஸார்யரின் அநுஸந்தாநம். அவர், தாம் வரதார்யரிடத்தில் கேட்டதை ப்ரகாசப்படுத்தினதென்று அந்த அத்புதமான க்ரந்தத்துக்குத் திருநாமம் சாத்தினார். அந்த க்ரந்தத்திற்கும் அதன் மூலமான ஸ்ரீபாஷ்யத்திற்கும் ஸாரம் இந்த க்ரந்தம். கேட்டதை ப்ரகாசப்படுத்தினோம் என்றார் குருபக்தியால் வ்யாஸார்யர். ‘வ்யாஸார்யருடைய ஆசார்யரிடம் நான் கேட்கவுமில்லை; அவரால் நான் ச்ராவிதனுமல்லேன். அப்படிக்கிருந்தும் அவரால் நான் த்ருஷ்டமான மாத்ரத்திலே இந்த க்ரந்தம் செய்ய அநுக்ரஹம் ஏற்பட்டது’ என்கிறார். இந்த க்ரந்தத்தைச் செய்தது மூவர் கார்யமென்றார் முடிவில். வெள்ளைப் பரிமுகர்வேதமயனான தார்க்ஷ்யன்மேல் ஆரூடராய், இவர் குருவான வாதிஹம்ஸாம்புவாஹருடன் கூடிச் சொன்னது இந்தப் பாசுரங்கள் என்று சொல்லப்பட்டது. ஹயக்ரீவன் கருடன் அப்புள்ளார் என்று மூன்று கர்த்தாக்கள் சேர்ந்து செய்தது இது. இம்மூன்று கர்த்தாக்களிலும் தாம் ஒருவரல்ல என்று விநயத்தாலும் பக்தியாலும் கூறுகிறார்.

‘பராகுவிதை:’ என்னும் பாடமும் ப்ராசீந ஓலைக் கோசங்களில் காணப்படுகிறது. பித்தோபஹதர்களுக்குப் பால் கைக்கும் என்பது ப்ரஸித்

தம். பாலை ஸேவிப்பதினால் பித்தம் சாந்தமாகும் என்பதும் வைத்ய சாஸ்த்ர
ப்ரஸித்தம். பாலே பித்தத்திற்கு ஸித்தமான மருந்தாகும். இந்த மருந்து
சரக்குகளைக் கலுவம் முதலிய கருவிகளில் போட்டு அரைத்துப் புடம்; முத
லியவை வைத்துத் தயார் செய்ய வேண்டியதில்லை. பால் கறந்தபடியே
நுரையுடனே, காய்ச்சும் ச்ரம மின்றியிலே கறந்தபடி ஸேவித்தால் பித்தம்
சமனமாகும். பித்த சாந்தியை விரும்புமவர் இந்தக் கறந்த பாலை ஸேவிக்க
லாம். பித்த மில்லாதவர் இந்தப் பாலை ஸேவித்தால் கைக்காமல் ரஸிக்கும்.
பித்தமுள்ளவரும் இந்தப் பாலை ஸேவித்தால் பித்தந் தெளியும். ஒரு
க்ரந்தத்தை ஸேவிப்பவருக்கு மத்ஸரம் அஸூயை என்பவை பித்தமாகும்.
இந்தப் பித்தத்தால் க்ரந்தம் பிடிக்காமல் அரோசக முண்டாகும். மத்ஸர
பித்த நிபந்தனமான அரோசகம் என்றார் வாசஸ்பதி மிச்ரர். என்னிடத்தில்
அப்யஸூயைப் படுகிறவனிடத்தில் இந்த கீதாம்ருதத்தைப் பானம் செய்யும்
படிக் கொடாதே என்று தமக்குக் குரு தக்ஷிணையாக வரன் கேட்டுக் கொண்
டார் கீதாசார்யன். கீதையென்னும் திவ்யாம்ருதமும் பகவானிடத்தில்
அஸூயையுள்ளவனுக்கு (அதாவது அந்த கீதா க்ரந்தத்தைச் செய்த கண்ண
னிடத்தில் அஸூயை யுள்ளவனுக்கு) ஒருக்காலும் பிடிக்காது என்று
பயந்து, அவனுக்கு உபதேசிக்கவே கூடாது என்றார் பகவான். அஸூயை
என்ற பித்தம் கழிந்தவர்களான சாந்த பித்தர்களுக்கு உபதேசிப்பது
தான் முக்யமாய் மனோரத விஷயம். அது உத்தம கல்பந்தான்.
ஆயினும் அஸூயா ஜடிலமான வித்வல்லோகத்தில் விகதாப்யஸூய
ரான ஸத்யமான ஹ்ருதயமுடைய ஸத்துக்கள் அரிதான படியால், ஆசார்ய
கடாக்ஷங்கள் சொரிந்த இந்த ஜ்ஞானப்பால் பாக்கள் காநந சந்த்ரிகையாக
அநுபவிப்பாரின்றி வீண் போகலாகாது. வித்வான்கள் இந்தப் பாலை ஸேவித்
தால் மெள்ள மெள்ள அஸூயா பித்தந் தெளிந்து சாந்தியை யடைந்து
இதைப் பருகிப் பருகி ரஸிப்பர் என்று இரண்டாவது கல்பமான அதிகாரி
களையும் சொல்லுகிறார். சாந்தி லாபம் என்பதற்கு எதன் சாந்தியென்று
அபேக்ஷையுண்டாக, முன்கூறிய பித்தத்தின் சாந்தி என்று அர்த்தம்.
இந்தப் பாலை ஸேவித்தால் அரோசக வ்யாதி நீங்கி ருசி யுண்டாகும்.

காதைநாக்காகச் செய்யவேண்டும் என்று சொன்னதில் ஒரு விசேஷ
ஸ்வாரஸ்யம் கவனிக்கத்தக்கது. ஸத்வித்யையில் த்ருஷ்டாந்த நவகமென்று
ஒன்பது த்ருஷ்டாந்தங்கள் சொல்லியிருப்பதில் லவணோதக த்ருஷ்டாந்தம்
ஒன்று. அதற்கு அடுத்தாப்போல் புருஷ கந்தார தேச த்ருஷ்டாந்தம்
கூறப்பட்டது. உப்புக் கட்டியை ஜலத்தில் போடச் சொல்லிச் சில
நேரம் வைத்திருந்து, பிறகு, உச்சியிலும் மத்தியிலும் அடியிலும் ஓரத்
திலும் பிள்ளையாகிய ச்வேதகேதுவை ருசி பார்க்கச் சொல்ல, அவனும்
நாக்கினால் ருசி பார்த்து, ஜலம் முழுவதும் ஒரே உப்புமயமா

யிருக்கிறது என்று சொன்னான். இந்த த்ருஷ்டாந்தத்தால் ரஸ ரூபமான ப்ருஹ்மத்தால் ஜகத் வ்யாப்தமாயிருந்தும், அது, உப்பு மயமான ஜலத்தில் உப்பு கண்ணென்னும் இந்த்ரியத்துக்கு மறைந்திருந்தாலும் அதை அறிவதற்கு யோக்யதையுடைய நாக்கென்னும் இந்த்ரியத்திற்குக் கோசரமாகிறது போல், ப்ரஹ்மம் உப்புப்போல் ஸர்வத்ர வ்யாப்தமாகி எங்கும் நிறைந்திருந்து, இந்த்ரியங்களுக்கு யோக்யமல்லாத படியால் தெரியாமல் இருக்கிறதே யொழிய, அது வ்யாபிக்காமல் இருக்க வில்லை என்று தெரிந்துகொள்ளவேண்டுமென்பது தகப்பனாரின் அபிப்ராயம். உப்பு மறைந்திருந்தும், நிறைந்திருப்பதைக் கண்ணினால் காணக்கூடாவிடினும், நாக்கென்னும் இந்த்ரியத்துக்குப் புலப்படுகிறது. ப்ரஹ்மம் எங்கும் நிறைந்திருந்தும், 'ஒரு இந்த்ரியத்துக்கும் புலப்படவில்லையே! அது எப்படி புலப்படுமோ தெரியவில்லையே! எந்த ஸாதநத்தால் எந்தக் கரண மூலமாய் இது புலப்படும்? இதை எனக்குத் தெரிய உரைக்கவேண்டு' மென்று ச்வேதகேது ப்ரார்த்திக்க, அடுத்த கந்தார தேச த்ருஷ்டாந்தம் கூறப்பட்டது. கண்ணைக் கட்டிவிட்டுக் கொண்டுபோகும் வழி தெரியாமல் வேறு தேசத்திற்குக் கொண்டுபோய், அங்கே கண்ணை அவிழ்த்துவிட்டால், தன் சொந்த ஊருக்குப்போக வழி தெரியாமல் தட்டுத் தடுமாறித் திகைத்து அந்த ஊருக்கு வழி தெரிந்தவர்களைக் கேட்டே எப்படி வழியைத் தெரிந்து கொள்வானோ, அப்படியே ப்ரஹ்மத்தை அடைய ப்ரஹ்மத்தின் ஸமீபம் சென்று தர்சித்தவர்களிடம் கேட்டுத்தான் ப்ரஹ்மத்துக்குப் போய்ச் சேரும் வழி தெரிந்து கொள்ளக்கூடும். இப்படி ஆசார்யனிடம் கேட்பதுதான் ஸாதநமாகக் கூடுமாகையால் ச்ரவணமே நாக்கின் ஸ்தாநத்தில் இருக்கவேண்டும் என்று தெரியப்படுத்துவதிலும் நோக்கு. எனக்குக் கடாக்ஷங்களால் (அதாவது த்ருஷ்டத்தால்) கிடைத்த இது, உங்களால் ச்ருதத்தால் அடையப்படவேணும். அவஹிதர்களான பஹுவித்துக்களின் முன்னிலையில் இவருக்கு வேதாந்தாசார்யன் என்கிற திருநாமத்தை விசேஷித்து அளிக்கவே இவரிடத்தில் பெரிய பெருமாளுக்குப் பக்ஷபாதம் இருந்து இப்படிப் பெயர் சாத்தினாரே யொழிய, இவருக்குக் கொடுத்த பெயர் ஸார்த்தகமாகாது, அது நிரார்த்தகம் தான் என்று கூட இருந்த பஹுவித்துக்களின் கோஷ்டியில் பெரிய பெருமாளின் தாக்ஷிண்யம் பக்ஷபாதம் முதலியவை நீங்கிய ஸத்ய த்ருஷ்டியாலும் ஸத்யவசநத்தாலும் கொடுத்த பெயரை அதிசங்கைப்பட்டு இவரிடத்திலும் இவருக்குப் பட்டம் கொடுத்தவரிடத்திலும் அருவருப்பும் அவஜ்ஞையும் உண்டாக ஆரம்பிக்க, உடனே பெரியபெருமாளை அவர்களொருவரும் தூஷிக்காமலிருக்கும்படி பெரிய பெருமாள் பெயரை ரக்ஷிப்பதற்காக அவர் முன்னிலையிலும் அதிசங்கைப்பட்ட வித்வான்கள் முன்னிலையிலும் இந்த அத்புதமான வேதாந்த பாசுரங்களைச் செய்து, 'அந்தப் பெயரை ஸார்த்தகம்

செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ‘ஶாங்கவிதை:’ என்று இந்த விஷயத்தை ஸூசித்ததாகவும் கொள்ளலாம். ‘ஶாங்கவிதை:’ என்கிற பாடத்திலும் இந்த அர்த்தத்தை வ்யஞ்ஜநா வ்ருத்தியால் கொள்ளலாம்.

பெரிய பெருமாள் இவருக்கு வேதாந்தாசார்யனென்று சாத்தினதற்கு இவர் வேதாந்தஜ்ஞானப்பாலை வேதாந்தங்களைக்கறந்து, சிஷ்ய பரம்பரைகளுக்குச் சொரியவேணும். அந்த வ்யாபாரம் இந்த க்ரந்தத்தால் செய்யப்படுகிறது. இந்தப் பால் என்றைக்கும் கறந்தபடியே, பரிணமிக்காமலும் விகாரிக்காமலும் புதிதாகவே இருக்கும். ஜ்ஞானப் பால் அவ்யயமானது. இது காலத்தால் கால்யமல்ல: இது என்றைக்கும் இப்பொழுது கறந்ததுபோல் நவமாயிருக்கும் என்பதும் ‘ஊஃழு’ சப்தத்தால் வ்யஞ்ஜிக்கப்படுகிறது. இதராதாக்ஷீராதி சப்தங்களை ப்ரயோகித்திருக்கலாம். பெரிய பெருமாள், தமக்கு மிகவும் ப்ரியமானவர்களுக்கு ஒரு புது ஜ்ஞானப் பெயர் இடுவதில் ப்ரீதியுள்ளவர். அவருக்கு ஜ்ஞாநிகள் அத்யர்த்தம் ப்ரியர்கள். ரங்கநாதன் என்று திருநாமமுடைய பட்டருக்குப் பராசரர் என்கிற புதுப் பெயர் சாத்தினர். ஸுதர்சந பட்டருக்கு வ்யாஸார்ய ரென்கிற பெயர் கொடுத்தார். இவருக்கு வேதாந்தாசார்ய ரென்கிற பெயர் கொடுத்தார். பெரிய பெருமாள் சிரகாலம் திருவயோத்யையில் இக்ஷ்வாகு வம்ச்யர்களால் ஆராதிக்கப்பட்டு, அவர்களுக்குக் குலதைவமாயிருந்தவர். அந்தக் குலத்தோருக்குப் பரம்பரையாய்க் குல குருவாயிருந்த வஸிஷ்டரும் அவர் வம்ச்யரும் பெரிய பெருமாளுக்குச் சிர பரிசய முடையவர்கள். இக்ஷ்வாகு வம்ச்ய ராஜாக்களுக்காக அவர்கள் குலகுருவாகிய வஸிஷ்டர், அவர்கள் குல தைவதமாகிய பெருமாளைச் சிர காலம் ஆராதித்திருக்க வேணும். யார் ஆராதித்திருந்தாலும் இவருக்கு ரக்ஷ்யமான குலமான இக்ஷ்வாகு குலத்திற்குக் குல குருவான வஸிஷ்டர் இவருக்கு மிகவும் பழக்கமுடையவரா யிருக்கவேணும். வஸிஷ்டர் குலத்தில் பிறந்த சிசுக்களான பராசரர், வ்யாஸர், என்கிற பெயர்களை அபூர்வமான உத்தம பெயர்களாக இவர் திருவுள்ளம் பற்றி, பராசர ரென்கிற பெயரைப் பட்டருக்கும், வ்யாஸார்ய ரென்கிற பெயரை ஸுதர்சந ஸூரிக்கும், பாதராயண ரென்பதற்குப் பர்யாயமான வேதாந்தாசார்ய ரென்கிற பெயரை இவருக்கும் கொடுத்தார் போலும். வ்யாஸ வேதார்ணவம் என்று சொல்லப்பட்ட மஹா பாரதம்போல் மஹத்தும் விஸ்தீர்ணமுமான வ்யாஸங்களான உபபாதநங்களையுடைய ச்ருத ப்ரகாசிகையைச் செய்தருளினவருக்கு வ்யாஸார்யரென்று திருநாமம் கொடுக்கப்பட்டது ஸார்த்தகமென்பது திண்ணம். இந்த க்ரந்தம் செய்வதை உத்தேசித்து ஸ்வாமிக்கு வேதாந்தாசார்யரென்கிற திருநாமம் கொடுத்ததாக முதல் ச்லோகத்திலிருந்து ஊஹிக்கலாம். எப்படி இருந்தாலும் இந்த க்ரந்த நிர்மாணத்தால்

தான் அந்தப் பெயர் ஸார்த்தகமாகச் செய்யப்படுவதாய் ஸ்வாமியின் நினைப்பு என்பது முதல் ச்லோகத்தில் ஸ்பஷ்டம். இவருடைய இந்த க்ரந்தம் ச்ருதப்ரகாசிகையின் விஸ்தாரத்தை அபேக்ஷித்து, அதன் ஸாரம் முழுவதையும் அதிஸங்க்ரஹமாக ஸம்க்ஷேபித்திருப்பதால் இதை ஸூத்ரமென்று சொல்லக்கூடுமானதால், இவருக்குப் பாதராயணரைச் சொல்லும் வேதாந்தாசார்யர் என்கிற பெயர் கொடுக்கப்பட்டதுபோலும். வேதார்த்தங்களை மீமாம்ஸநஞ் செய்து நிர்ணயித்து நிஷ்கர்ஷத்தை உரைப்பவர்கள் ஆசார்யர்கள். வேதத்தின் பூர்வ பாகங்களின் அர்த்தங்களை நிர்ணயித்து உரைத்தவர் ஜைமினி ஆசிரியர். அப்படியே ப்ரஹ்ம பாகமான வேதாந்தங்களின் அர்த்தங்களை நிஷ்கர்ஷித்து ஸங்க்ரஹமாக உபதேசித்தவர் பாதராயணர்; அவர்தான் வேதாந்தாசார்யர்; இந்த அதிகரண ஸார ஸங்க்ரஹ கர்த்தாவுக்கு வேதாந்தாசார்யர் என்கிற பெயர் கொடுப்பது உசிதமென்பது பெரிய பெருமாள் திருவுள்ளம்போலும்.

பால் என்று சொல்லுவதால், ஸ்ரீபாஷ்யாதி வேதாந்த க்ரந்தங்களை அதிகரித்து, ஜ்ஞானப் பிறப்பினால் சிசுவாய்ப் பிறந்தவுடன் இந்தப் பாலைப் போட்டவேணும். சைசவத்திலும் பால்யத்திலும், யௌவநத்திலும், வார்த்தகத்திலும் இந்தப் பாலைப் பிறந்தது முதல் கடைசி வரையில் ஸேவிக்கலாம். ஆரம்பம் முதல் முடிவு வரையில் இந்தப் பாலே தாரக போஷகமாகும். பச்சைப் பசுமையும் நவமும் ரஸ கநமுமான ஹரித த்ருணபூர்ண ரஸாஹார ஸம்ருத்தியுடைய ஸ்ரீ பாஷ்ய மென்கிற வேதாரண்யகத்தில் வயிறு நிறைய மேய்ந்து அந்த ரஸ தடாகங்களில் யதேஷ்டமாய்ப் பாநம் செய்து, தாம் உண்டு பாநம் செய்ததைத் தம்முடைய கன்றுக்கு க்ஷீரமாய்ப் பரிணமைப்படுத்திச் சுரப்பதுபோல், பாலாய்ச் சுரந்தது இந்த க்ரந்தம் என்றும் பாவம். ச்ரவண ரஸநையினால் ஸேவிக்கவேண்டுமென்று சொன்னதால், இந்த க்ரந்தம் ஆசார்யனிடம் ச்ரவணம் செய்தே ஸேவிக்கவேணும். இது பால்போல அறைக் குழந்தைக்கும் பாநம் செய்யும்படி ஸுலபமாயும் மதுரமாயும் இருந்தாலும், இதைத் தானாக முதலில் தன் நாக்கினால் ருசி பார்த்து உச்சரித்து அநுபவிக்கக்கூடாது. சர்ண புடங்களின் வழியாய் இந்தப் பாலைப் பருகி ஹ்ருதயத்திற்குள் சேர்க்கவேணும் என்றும் பாவம். 'யாயஜ்ஞாயை வஹ்நி:' என்று இந்த விஷயத்தை முடிவிலும் ஸாதிக்கிறார். அங்கே முதலில் ச்ரவணம் செய்த பிறகும் தாரணமென்கிற மநநம் செய்யுங் காலத்திலும், ச்ரவணம் செய்வித்த ஆசார்ய ஸ்மரண பூர்வகமாகவே செய்யவேண்டுமென்றும் ஸூசிக்கப்பட்டது.

ச்ரவணம் ரஸநை யென்கிற இரண்டு இந்த்ரியங்களை ப்ரஸ்தாவித்ததால், ஸத்வித்யா த்ருஷ்டாந்தங்களிரண்டின் ஸ்மாரணத்தில் திருவுள்ளம்

என்று சொன்னோம். அந்த விடத்தில் 'ஆசார்யவாந் புருஷோ வேத' என்றுள்ள வாக்யமே எடுத்துக் காட்டப்பட்டது முடிவில் ஆசார்யவாங்களா லேயே என்று. ச்ருதி பதத்திலுள்ள மதுப்பினால் நித்ய யோகத்தைக் கொண்டு நித்ய சேஷித்வம் சொல்வது ஆசார்யர்களுக்கு. ஆத்ம ஸாம்யத்தை அவர்கள் கருணை யாலளித்த பிறகும் இவர்கள் அவர் சேஷித்வத்தையே அநுஸந்திப்பர். 'வேத' என்கிற ச்ருதி பதத்திற்கு உபாஸக பர்யந்தம் தாத் பர்யமானதானுர், மநநத்திலும் தாத்பர்ய முளதாலும், தாரண தசையில் ஆசார்யவத்வம் வேணுமென்று காட்டப்பட்டது. 'தார்ய' மென்கிற பதத்தி னால் ச்ருதியில் முன் த்ருஷ்டாந்தத்தில் நாக்கைத் தெரியாத வஸ்துவை க்ர ஹிக்க ஒரு கரணமாகச் சொன்னதும், ஜலத்தில் கரைந்து மறைந்திருக்கும் உப்பைப்போல ஜகத்தில் கரந்தெங்கும் பரந்துளதான அத்ருச்ய அக்ராஹ்ய ப்ரஹ்மத்தை நாக்கினால் அறியக்கூட வில்லையே என்று பிள்ளை சங்கிக்க, அடுத்த ஆசார்ய த்ருஷ்டாந்தத்தால் 'இதுவும் ஒரு நாக்கினால் க்ரஹிக்கக் கூடியதுதான்; ஆனால் உன் நாக்கினால் முடியாது. தேசிக ஜிஹ்வையாலும் உன் காதினாலும் சேர்ந்து க்ரஹிக்கக் கூடியது' என்று தகப்பனார் பரிஹா ரம். முதலில் காது வழியாய் மாதுர்யத்தை வாங்கிப் பிறகு தன் நாக்கினால் சொல்லிச் சொல்லி இனிப்பை அநுபவிக்க வேணும். இந்த இனிமையான பாசுரங்களைக் கேட்கவும் மதுரம்; உச்சரிக்கவும் மதுரம். இதன் மாதுர்யத் தில் ஈடுபட்டு லயிக்காதவரில்லை. மத்வ ஸம்ப்ரதாயத்தில் ஸுதாசிரியரும் சந்த்ரிகாசிரியரும் தேசிகன் க்ரந்தங்களைப் பார்த்தவரல்லர். சந்த்ரிகாசிரியர் ச்ருதப்ரகாசிகை முழுவதும் பார்த்தவர். சந்த்ரிகையில் ச்ருதப்ரகாசம் என்று அவர் அநுவதிப்பது. சந்த்ரிகைக்கு வ்யாக்யாதா மந்த்ராலய ஸ்வாமி என்று ப்ரஸித்தியுள்ள ராகவேந்த்ர ஸ்வாமிகள். அவர் ஸுதைக்குப் பரி மளமென்கிற வ்யாக்யானஞ் செய்தவர். சந்த்ரிகைக்கு ப்ரகாசம் என்கிற ஒரு உயர்ந்த வ்யாக்யானம் செய்திருக்கிறார். அந்த க்ரந்தத்தில் அதி கரண ஸாராவளி ச்லோகங்களை ஒவ்வொரு அதிகரணத்திலும் மிகவும் ரஸத்துடன் உதாஹரித்திருக்கிறார். அப்பைய்ய தீக்ஷிதருக்கு அதிகரண ஸாராவளி மனப்பாடமா யிருந்ததென்றும், அது அவர் நாவுக்குத் தித்தித்த தென்றும் பின்பு காட்டுவோம்.

ச்ருதியில் மாலாஹஸ்தைகள் என்று இருப்பதால் மாலா சப்த கடிதமான மாலினீ வ்ருத்தம் கைக்கொண்டால் அந்த ச்ருதிக்கு நேர் ஒத்திருக்குமே. என் ஸ்ரக்தரையை ஆச்ரயிக்க வேணும்? கையில் மாலை யுடன் வருவதைக் காட்டுவது அவச்யம். மாலினி என்றால் மாலையுங் கையு மாய் வருவதாக ஏற்படாது. ஸ்ரக்தரை ஒன்றில் தான் அந்த அம்சம் கிடைக்கும். 'வநமாலிநீ கதீ சார்ங்கீ சங்கீ சக்ரீ ச நந்தகீ' என்று பஞ்சராத்ர ரக்ஷையில் ஸாதித்திருக்கிறபடி, இந்தப் பாமாலையாகிய பூமாலைக்கு ஒரு

குணம் மட்டும் உளதென்று சொல்லாமல், அநேக குணங்களால் அது அமைந்ததென்று சொல்லுவது உசிதமாகும். அதைக்காட்டப் பஹுகுணமென்று சொன்னது. கலங்காப் பெருநகரில் நுழையுங்கால் மதிமுக மடந்தையர் கொணரும் பூமாலைகள் க்ருத்ரிமமான பூக்களாலும் குணங்களாலும் அமைந்ததல்ல; அவை நித்யவிபூதியான ஸஹஜ சுத்த ஸத்வமயமாயிருக்கும். குணங்களால் நிறைந்தது காவ்யமாகும். அந்தக் குணங்கள் க்லேசத்துடன் கஷ்டப்பட்டு வராமல் ஸஹஜமாய் அமைந்தால் மிகவும் அழகு. முதல் ச்லோகத்தில் அந்தப் பாஷ்யமும் அந்தப் பாஷ்யகாரரும் அந்தப் பகவானும் ஸம்யக்காய் நமக்கு ப்ரஸங்கமாக வேணும் என்கிற தனியன் ச்லோகத்திலுள்ள ‘ஸம்யக்’ என்கிற பதம் தவிர மற்றவை எடுக்கப்பட்டன. மிகுதியிருந்த அந்தப் பதங்களும் இங்கே உபயோகிக்கப்பட்டன ‘ஸஹ்ருதய...’ என்று.

ஸ்ரீ:

ப்ராஹ்மணர்களின் தத்கால ஸ்திதி.

[ஸ்ரீ. உப. வித்வாந். தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர்.]

(ஸஞ்சிகை 8, பக்கம் 230 தொடர்ச்சி)

‘[illegible]’ என்கிற வசநத்தின்படி தர்ம லோபம் செய்யவேண்டுமென்கிற கெட்ட எண்ணத்தை உள்ளத்தில் கொண்டு, வெளியில் உலகத்தின் முன்னேற்றத்துக்காகக் கால நிலைமையை அநுஸரித்து இவ்வாறு சட்டம் கொண்டுவர முயற்சிக்கிறேரும் என்று சொல்பவர்களும்; ப்ராஹ்மணர்களைவிட ஆள் கூட்டத்தாலும் தநமதத்தாலும் தேஹ பலத்தாலும் தீவ்ரமான நிர்ஹேதுக வைரத்தாலும் பலிஷ்டர்களுமான இவர்களைத் தர்ம தேவதை நீடூழிகாலம் உலகத்தில் ஜீவிக்கச் செய்யுமாறு வேண்டப்படுகிறது. ராஜகீய வித்யையை அப்யஸிப்பதால் பயனில்லை என்கிற எண்ணம் ப்ராஹ்மணர்களுக்கு மனத்தில் ஊன்றி இருந்தபோதிலும், பி. ஏ. பி, எல், எம், ஏ, எம். எல், முதலிய பரீக்ஷைகளில் நன்கு தேர்ச்சியடைந்தவர்கள் ராஜாங்கத்தில் ஒரு விதமான பதவியைப் பெறாமல் வீணாகக் காலம் கழிப்பதைக் கண்ணுற்றவர்களாக இருந்தபோதிலுங்கூட, புராதநமான துர்வாஸனையினால் பிள்ளைகளை இங்க்லீஷ் பள்ளிக்கூடத்திலேயே படிக்கச் செய்கிறார்கள். சக்ரத்தைச் சுழற்றி விட்டுவிட்டால் கொஞ்ச காலம் சுழன்று

தான் நிற்கும். ஓடும் குதிரையைத் திடீரென்று கடிவாளத்தால் இழுத்துப் பிடித்தால் அந்த க்ஷணத்திலேயே அந்த இடத்தில் அது நிற்காது; கொஞ்ச தூரம் ஓடித்தான் நிற்கும். அவ்வாறே ப்ராஹ்மணர்கள் இச்சமயத்தில் ராஜகீய வித்யையைக் கற்கிறார்கள். நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்கு இந்தப் படிப்பு பயன்படாதென்பது நன்கு அநுபவத்துக்கு வந்துவிட்டது. ஆனால் இந்த ஆபத் காலத்தில் ப்ராஹ்மணர்கள் எந்தத் தொழிலைக் கைப்பற்றுவதென்றால், சிலர் கையிலுள்ள முதலைப் போட்டு வ்யாபாரம் செய்வதுதான் சிறந்ததென்கிறார்கள். சிலர் எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டு கம்பெனி முதலிய ஆபீஸுகளில் வேலைக்குப் போவது தான் ஸரி என்கிறார்கள். சிலர் முன்னோர்கள் இருந்த மாதிரி க்ராமங்களிலிருந்துகொண்டு நிலங்களில் பயிரிட்டு ஜீவிப்பதுதான் உத்தம கார்யமென்கிறார்கள். சிலர் ப்ராஹ்மணர்களுக்கு உரிய வேதாத்யயநத்தைச் செய்து, விஹித காலங்களில் ஸ்நாந ஸந்த்யாவந்தந ஜப தபங்களென்கிற ஸத்கர்மாக்களை அநுஷ்டித்துக்கொண்டு, கிடைத்ததைக்கொண்டு ஜீவிப்பதுதான் உசிதமென்கிறார்கள். சிலர் தக்க ப்ரபுக்களைக்கொண்டு ஸம்ஸ்க்ருத பாடசாலைகளை அநேக இடங்களில் ஏற்படுத்தி, அதில் ப்ராஹ்மணப் பிள்ளைகள் எல்லோரையும் கட்டாயமாய்ப் படிக்கும்படி செய்வித்து, காவ்யம் நாடகம் அலங்காரம் முதலிய ஸாஹித்ய மார்க்கத்தையும், தர்க்கம் வ்யாகரணம் மீமாம்ஸை வேதாந்தம் ஆயுர்வேதம் தர்ம சாஸ்த்ரம் ஜ்யோதிஷம் ஆகம சாஸ்த்ரம் இவைகளையும் நன்றாகக் கற்பித்து, படித்துத் தேறினவர்களுக்கு ஸம்மாநத்தை அளித்து, அவர்களுக்கு உபாத்யாய பதத்தைக் கொடுத்துப் பல பாடசாலைகளை ஏற்படுத்தி, அவைகளில் வித்வான்களைக் கொண்டு தக்கபடி ப்ரவசநம் பண்ணும்படி செய்வித்து, க்ராமங்களிலும் நகரங்களிலும் வித்வத் ஸபைகளை ஏற்படுத்தி, அவைகள் பலப்படும்படியான முயற்சிகளைச் செய்து, வருஷம் ஒருமுறை வித்வத் ஸம்மேளநத்தைச் செய்வித்து, கற்றறிந்த வித்வான்களுக்கு ஆங்காங்கு ஸம்மாநங்களும் படிக்கிற பிள்ளைகளுக்கு அவரவர்கள் முயற்சிக்குத் தக்கபடி பரிசுகளும் கொடுத்து, குலவித்யையை உஜ்ஜீவிக்கச்செய்து, ஸநாதந தர்ம மார்க்கத்தை எங்கும் பரப்பி, பராபேக்ஷையின்றி இவ்வித மார்க்கத்தால் கிடைக்கும் த்ரவ்யத்தைக் கொண்டு ஜீவிப்பது தான் யுக்ததமம் என்கிறார்கள்.

இந்த ஐந்து வழிகளும் ஒருவாறு சிறந்தவைகளே. ஆயினும், சற்றுக் கவனித்துப் பார்ப்பவர்களுக்கு இவை அனைத்தும் நல்வழிகளாகத் தோன்றமாட்டா. இவற்றுள் முதலாவது வழி வ்யாபாரம். அதில் இவர்களுக்கு ஸாமர்த்யம் போதாது. ஸத்யாந்ருத மென்கிற இந்த வ்யாபாரத்தில் பொய்யைச் சொல்லியே ஜீவிக்க வேண்டியிருப்ப

தால், ப்ராஹ்மணர்களுக்கு ஒருவிதத்தாலும் இது பொருந்தாது. இரண்டாவது, கம்பெனி முதலிய இடங்களில் ப்ரவேசித்து, அந்யனுக்கு ஆள்பட்டு, பாரதந்த்ரயத்தை வஹித்து ஜீவிப்பதென்பது. இந்தத் தொழில் மிக்க இழிவானது. இதுதான் ச்வ வ்ருத்தி. இது 'ஸேவா ஶ்வவ்ருத்திராக்யாதா தஸ்மாத்தாம் பரிவர்ஜயேத்' என்று மநு தர்ம சாஸ்த்ரத்தில் மறுக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது பயிரிடுதல். இது மற்ற வ்ருத்திகளைவிடச் சிறப்பு வாய்ந்ததுதான். ஆனால் இது ஹிம்ஸா வ்ருத்தி. இதை 'ஸம்வத்ஸரேண யத்பாபம் குருதே மத்ஸ்யகாதக꞉ । அயோமுகேந காஷ்டேந ததேகாஹேந லாங்கலீ ॥' [தினந்தோறும் வலை வீசி மீன்களைப் பிடித்து அவைகளைக் கொல்லுகிற செம்படவன் ஒருவர்ஷத்தில் எவ்வளவு பாபத்தைச் செய்வனோ அவ்வளவு பாபத்தையும் கலப்பை மேழியைப் பிடித்து இரும்புக் கொழுவினால் நிலத்தை உழுகிறவன் ஒரு நாளில் அடைகிறான் என்பதால்] ஸ்ரீபராசர ஸ்ம்ருதி நிஷேதிக்கிறது. ஆகவே இந்த வ்ருத்தியை ப்ராஹ்மணன் தான் நேரில் செய்யாதிருந்தபோதிலும், அதைச் செய்விப்பதால் வரும் பாபம் அபரிமிதமாக உண்டாவதால் இதுவும் வர்ஜிக்கத் தக்கது. நான்காவது வ்ருத்தி உயர்ந்ததே. இதனால் ப்ராஹ்மண்யம் நன்கு பாதுகாக்கப்பட்டதாக ஆகும். ஆனால் இக்காலத்தில் விலை வாசிகள் எங்கு பார்த்தாலும் உயர்ந்து, தானியங்கள் தக்க விலையில்லாமல் மட்டுப்பட்டு, மழை இல்லாமையால் பஞ்சம் எங்கும் பரவி, ஜனங்களுக்குள் ஹாஹாகாரம் மேலிட்டு, 'எந்த வழியினால் நாம் குடும்பத்தை ரக்ஷிப்போம்? எவ்விதத்தில் பெண்களுக்குக் கல்யாணம் செய்வோம்? எவ்விதம் நாம் பசி தீரப் புஜிப்போம்? எந்த வழிகளால் பிள்ளைகளைப் படிப்பித்து வ்ருத்திக்குக் கொண்டுவருவோம்?' என்று ப்ராஹ்மணர்கள் மனவருத்தமுற்று ஒரு நாளை ஒரு யுகம் போல் பாவித்துக் கொந்தளிக்கிறார்கள். ஸுகமனைத்தும் தநத்தைச் சார்ந்திருப்பதனால், அப்படிப்பட்ட பொருளைப் போதுமான வண்ணம் அடைவதற்கு இது தகுதியுள்ள மார்க்கமாகாது. இந்த வ்ருத்தியானது ஸுகத்திலும் கௌரவத்திலும் ஒருவித கீர்த்தியிலும் நோக்குள்ளவர்களுக்குப் பயன்படாது. ஐந்தாவதான வழி தான் இக்காலத்துக்குத் தக்கது. இந்த வழியில் எல்லோரும் ஒருமனதாக இழிந்து, நம்முடைய குல தநமாகிய கீர்வாண பாஷையை எல்லோரும் கட்டாயமாகப் படித்து, அதின் வாயிலாக ஸ்வமதம் ஸ்வாசாரம் இவைகளை நன்கு அறிந்து, வைதிக கர்மாக்களை ச்ரத்தையுடன் அநுஷ்டித்து, ஆஸ்திகத்தை மேலிட்டு ஸ்வதர்மங்களை எங்கும் தழைக்கச் செய்து, ஸ்வதேசாபிமாநமுள்ள தநிகர்களான தார்மிகப் ப்ரபுக்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள கீர்வாண பாடசாலைகளில் வேத வேதாங்கங்களையும் தர்ம சாஸ்த்ரங்களையும் ஆகம சாஸ்த்ரங்களையும் தர்க்க வ்யாகரண மீமாம்ஸா சாஸ்த்ரங்களையும் அத்யாத்ம சாஸ்த்ரத்தையும்

நன்றாகக் கற்றுணர்ந்து, தேர்ச்சி அடைந்து, அர்த்த சாஸ்த்ரங்களையும் அப்யஸித்து, ஆங்காங்கு ப்ரவசநம் செய்வதற்காகத் தகுந்த சம்பளத்துடன் ஔபாத்யாயக பதத்தைப் பெற்றுத் தர்மங்களை எங்கும் உபந்யஸித்து, ஸநாதந தர்மங்களை எல்லோரும் அநுஷ்டிக்கும்படி செய்வித்து, கர்மடர்களாகவும் ஆஸ்திகர்களாகவும் இருந்து, ஸபைகளில் அடிக்கடி சாஸ்த்ர விசாரங்களைச் செய்து ஸம்மாநம் பெற்று, கீர்த்தியையும் தநங்களையும் ஸுகங்களையும் தாங்கள் அடைவதுடன், பிற்காலத்தில் எல்லோரும் இவ்வண்ணமான நிலைமையை அடைவதை உத்தேசித்துச் சிறுவர்களைப் பால்யம் தொடங்கியே இந்த வழியி விழியச் செய்து, நல் வாஸனையைப் புகட்டி உத்தரோத்தரம் மதத்திலும் ஆசாரத்திலும் தர்மத்திலும் ஸுகத்திலும் ஸத் த்ரவ்ய ஸம்பாதநத்திலும் நிகரற்ற ப்ராஹ்மண்யத்திலும் நிதி போன்ற வேதாத்யயநத்திலும் நிலைபெற்று, ஒப்பற்ற ப்ரஹ்மவர்ச்சஸத்துடன் ஆசந்த்ரார்க்கம் ப்ராஹ்மணர்கள் நித்ய ஸந்துஷ்டர்களாக வாழ்ந்திருப்பார்களாக. இப்படி ப்ராஹ்மணர்களைத் தற்காலம் நேர்ந்திருக்கிற கஷ்டத்தினின்று விலக்கி, ஸுகத்தை அடையத்தக்க வழியில் கொண்டுவருவது மதாசார்யர்களுடைய க்ருத்யம். தேவதைகள் போல் பாவிக்கப்படுகிற ஆசார்யர்களுடைய ஸதுபதேசத்தால் தான் இந்தக் கார்யம் நிறைவேற வேண்டும். ஆதலால் மஹிமை வாய்ந்திருக்கிறவர்களும் ஜ்ஞாந நிதிகளும் தயாளுக்களும் தார்மிகர்களும் ஆஸ்திகாக்ரகண்யர்களும் மஹா தபஸ்விகளும் சுத்த சீலர்களும் க்ஷமா பூஷிதர்களும் வைராக்ய வாஸபவநங்களும் தெய்வத்தன்மை வாய்ந்தவர்களுமான மடாதிபதிகள், தார்மிக ப்ரபுக்களுடன் இந்த விஷயத்தைக் கவனித்துச் சிஷ்ய வர்க்கத்தின் யோக க்ஷேமங்களைப் பற்றித் தீர்க்காலோசனை செய்து, பெரிய மடங்களிலும் தேவாலயங்களிலும் ஏராளமாக மிகுந்திருக்கிற த்ரவ்யங்களையும் ப்ரபுக்களுடைய த்ரவ்யங்களையும் கீர்வாண பாஷாபிவ்ருத்தி விஷயத்திலும் வித்வான்கள் திறத்திலும் ஸம்ஸ்க்ருத பாடசாலைகளிலும் மதாபிவ்ருத்தியிலும் வைதிக தர்மாபிவ்ருத்தியிலும் உதார குணத்துடன் செலவிட்டு, சிஷ்யர்களாக இருக்கிற ப்ராஹ்மணர்களை இக்காலத்திய கொடுமைக்கு ஆட்படா வண்ணம் நன்கு காத்து, சாச்வத ஸுகத்தில் நிலைபெற்றிருக்கும்படி செய்யத் தக்க நன் முயற்சிகளை ஏற்றுக்கொண்டு, உலகத்தை ரக்ஷிக்க வேண்டுமென்று விநயத்துடனும் வணக்கத்துடனும் ஆயிரம் தடவை ப்ரணாமாஞ்ஜலிகளைச் செய்து விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீராமாநுஜாசார்யரும் ஸ்ரீகண்டாசார்யரும்

[ஸ்ரீ. உப. வித்வான் தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்.]

(ஸஞ்சிகை 8, பக்கம் 228 தொடர்ச்சி)

இவ்வாறு அநந்யாஸித்தமான யுக்திகளால் ஸ்ரீகண்டர் ராமாநுஜருடைய வேதார்த்த ஸங்க்ரஹத்தைப் பார்த்தே பாஷ்யம் எழுதியிருக்கவேண்டுமென்று தீர்மானித்தபடியால், ராமாநுஜருடைய வேதாந்த ஸாரத்திலும் ஸ்ரீகண்டருடைய பாஷ்யத்திலும் ஸூத்ரார்த்த கதநாவஸரத்தில் இருக்கும் பங்க்தி ஸாம்யம் வேதாந்த ஸாரத்தை அப்படியே தன் பாஷ்யத்தில் உபயோகித்துக்கொண்டு விட்டதால் ஏற்பட்டதாகுமென்று சொல்வது அநுபபந்நமாகாது. ஸ்வதந்த்ரமாக ஸம்ப்ரதாய ப்ரவர்த்தநம் செய்யக்கூடியவர்கள் இதர க்ரந்தங்களிலிருந்து எடுத்துக்கொள்ளவேண்டியது அநாவச்யகமேயாயினும் லோகத்தில் ஸித்தோபஜீவநம் பண்ணும் கணக்கில் இப்படி எடுத்துக்கொள்ளல் அவர்களுக்குப் பாண்டித்யத்திற்கோ அல்லது கௌரவத்திற்கோ ந்யூநதாபாதகமாக ஆகமாட்டாதென்பது அக்காலத்திய மஹான்களின் க்ரந்தங்களை நன்கு பரிசீலநம் செய்தவர்களுக்கு விசதம். வேதாந்த ஸார பங்க்தியையே ஸ்ரீகண்டர் தனக்கு விரோதமில்லாத பஹுவிடங்களில் ஸூத்ரார்த்த கதநாவஸரத்தில் முற்றிலும் உபயோகித்துக் கொண்டிருக்கிறார். அந்த ஸூத்ரங்களாவன:—

நவிலக்ஷணத்வாதிகரணத்தில் "ந து த்ருஷ்டாந்தபாவாத், ஸ்வபக்ஷதோஷாச்ச" என்கிற விடத்திலும், சிஷ்டா பரிக்ரஹாதிகரணத்தில் 'ஏதேந ஶிஷ்டாபரிக்ரஹா அபி வ்யாக்யாதா:' என்ற விடத்திலும், ஆரம்பணாதிகரணத்தில் 'ஸத்த்வாச்சாவரஸ்ய' என்கிற விடத்திலும், இதரவ்யபதேசாதி கரணத்தில் 'அதிகம் து பேதநிர்தேஶாத்' என்ற விடத்திலும், க்ருத்ஸ்நப்ரஸக்த்யதி கரணத்தில் 'ஆத்மநி சைவம் விசித்ராஶ்ச ஹி, ஸ்வபக்ஷதோஷாச்ச' என்கிற விடத்திலும், ரசநாநுபபத்யதிகரணத்தில் 'பயோம்புவச்சேத் தத்ராபி, விப்ரதிஷேதாச்சாஸமஞ்ஜஸம்' என்ற விடத்திலும், மஹத்தீர்க்காதிகரணத்தில் 'உபயதாபி ந கர்மாதஸ்ததபாவ:' என்று தொடங்கி நான்கு ஸூத்ரங்களிலும், பௌத்தாதி கரணத்தில் 'ஸமுதாய உபயஹேதுகா

[illegible]' என்று தொடங்கி அவ்வதிகரணம் முடியவும், அப்படியே உபலப்த்யதிகரணம் ஸர்வதாநுபபத்த்யதிகரணம் ஏகஸ்மிந்நஸம்பவாதிகரணம் இவைகளில் எல்லா ஸூத்ரங்களிலும், வியததிகரணத்தில் 'கௌண்யஸம்பவாத்' என்று தொடங்கி அதிகரணம் முடியவும், தேஜோதிகரணத்தில் 'ப்ருதிவ்யதிகாரரூபஶப்தாந்தரேப்ய:, அந்தரா விஜ்ஞாநமநஸீ, சராசரவ்யபாஶ்ரயஸ்து' என்கிற ஸூத்ரங்களிலும், 'நாத்மா ஶ்ருதே:' என்ற விடத்திலும், ஜ்ஞாதிகரணத்தில், 'ஜ்ஞோऽத ஏவ, ஸ்வாத்மநா சோத்தரயோ:, நாணுரதச்ச்ருதே:, அவிரோதஶ்சந்தநவத்' என்று தொடங்கி அதிகரணம் முடியவும், கர்த்ரதிகரணம் முழுவதும், பராயத்தாதிகரணத்திலும், அம்சாதிகரணத்தில் 'ப்ரகாஶாதிவத்து, அநுஜ்ஞாபரிஹாரௌ, அத்ருஷ்டாநியமாத், அபிஸந்த்யாதிஷ்வபி, ப்ரதேஶாதிதி' என்றவிடங்களிலும், ப்ராணோத்பத்யாதிகரணத்திலும், ஸப்தகத்யதிகரணத்திலும், இந்த்ரியாதிகரணத்திலும், ஸம்ஜ்ஞா மூர்த்யதிகரணத்தில் 'மாம்ஸாதி பௌமம்' என்ற விடத்திலும், ததந்தர ப்ரதிபத்த்யதிகரணத்திலும், அநிஷ்டாதிகார்யதிகரணத்தில் 'வித்யாகர்மணோரிதி து, [illegible], த்ருதீயஶப்தாவரோத:' என்ற விடங்களிலும், ஸந்த்யாதிகரணம் முழுமையிலும் கர்மாநுஸ்ம்ருதியதிகரணத்திலும், உபய லிங்காதிகரணத்திலும் அஹிகுண்டலாதிகரணத்திலும், பங்க்தி ஸாம்யம் கண்டு கொள்ளலாம்.

இவற்றில், நகிலக்ஷணத்வாதிகரணத்தில் பங்க்தி ஸமமாயிருப்பதுடன் கூட ராமாநுஜ க்ரந்தத்தில் "ப்ரஹ்மண:" என்று பொதுவாக ப்ரயோகித்திருக்க அந்த ஸ்தாநத்தில் ஸ்ரீகண்ட பாஷ்யத்தில் 'ப்ரஹ்மண: ஶிவஸ்ய' என்றும் 'மஹேஶ்வரஸ்ய' என்றும் எழுதியிருப்பதால் ஸ்ரீகண்டர் மேற்கொண்டு பரிஷ்கரித்து எழுதுகிறார் என்று ஊஹிக்க வேண்டியதாயிருக்கிறது. 'ஜிஜ்ஞாஸா' பத்ரிகையில் ஊஹித்தபடி ராமாநுஜர் அர்வாசீநரானால் அவர் ஸ்ரீகண்ட பாஷ்யத்தைப் பார்த்து எழுதும்பொழுது 'ப்ரஹ்மண: ஶிவஸ்ய' என்கிற ஸ்தாநத்தில் 'ப்ரஹ்மணோ நாராயணஸ்ய [illegible]' என்று எழுதாமலிருக்கமாட்டார். அப்படியே '[illegible]' என்கிற ஸூத்ரத்தில் 'அதவா' என்று விஷய வாக்யாந்தர பரிக்ரஹம் இருவருக்கும் ஸமாநமாயிருப்பதும் கவனிக்கத்தக்கது. இத்தால் ஒருவர்க்கொருவர் ஸம்பந்த மில்லாமல் க்ரந்த மெழுது மிருவர்களுக்கும் பங்க்தி ஸாம்பம் ப்ராயிகமாக நேரக்கூடுமாதலால் ஒருவர் க்ரந்தத்தை மற்றொருவர் பார்த்திருக்க வேண்டு மென்கிற நிர்ப்பந்த மில்லை யென்றது நிரஸ்தம். அப்பொழுது 'அதவா' என்று உபக்ரமித்த பக்ஷாந்தர பரிக்ரஹமும் ஸமாநமாயிருக்க முடியாது.

ஸூத்ரார்த்த கதநாவஸரத்தில் பங்க்திஸாம்ய மிருப்பது மாத்ர மன்றிக்கே, ஸ்ரீ பாஷ்யத்தில் உபயோகித்த சிற்சில வாக்யங்களை அப்படியே ஸ்ரீகண்ட பாஷ்யத்தில் உபயோகித்திருப்பதை அடியில் காணலாம். ஸ்ரீகண்-194-ல் 'ஶூலீதி க்ரியாவிஶேஷ: ஸ்ருஜதி காருவிஶேஷ:' என்று இது ஸ்ரீ பாஷ்யத்தில் 'ஸதேவ ஸௌம்ய' என்கிற ச்ருத்யர்த்த நிரூபணாவஸரத்திலிருக்கும் பங்க்தி. அப்படியே 'உபஸம்ஹாரதர்ஶநாந்நேதி சேந்ந' என்ற விடத்தில் 'வ்ருக்ஷாக்ரே ஶ்யேந: வ்ருக்ஷாக்ராத் பரத: ஶ்யேந:' என்று இது அநீக அதிகரணத்தில் ஸ்ரீபாஷ்ய பங்க்தி. ஸ்ரீகண்-32-ல் 'அநதீதவேதஸ்ய ததர்தாநவகதே:' என்று இது ஸ்ரீபாஷ்யாரம்பத்திலிருக்கும் பங்க்தி. ஸ்ரீகண்ட—176. விஷயே ப்ரவ்ருத்திகதநாவஸரே—ஸம்ப்ரதாயாதி ந்யாயநிர்ணயஸ்ய தத்த்வபாஷ்யோத்தேஷ்வவிஶேஷ ப்ரயோஜநை: என்று இது ஸ்ரீ பாஷ்ய ஜிஜ்ஞாஸாதிகரணந்தத்திலிருக்கும் பங்க்தி.''

தவிர வேதார்த்த ஸங்க்ரஹத்தில் (பக்கம்-377-ல்) 'அந்தஸ்தத்தர்மோபதேஶாத்' என்கிற ஸூத்ரார்த்த கதநாவஸரத்தில் 'கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ' என்கிற ச்ருத்யர்த்தத்தைச் சொல்லும் பொழுது 'கம்பீராம்பஸ்ஸமுத்பூத ஸம்ம்ருஷ்டநாளரவிகரவிகஸித புண்டரீகதளாமலாயதேக்ஷண:' என்று தொடங்கி 'பரமாத்மா பரம்ப்ரஹ்ம நாராயண இத்யவகம்யதே' என்று 'புண்டரீகாக்ஷ' சப்தம் நாராயணபர மென்றும், 'புண்டரீகமேவமக்ஷிணீ' என்ற விடத்திலிருக்கும் அக்ஷிசப்தோத்தர த்விவசநகம்யமான த்வித்வமும் விவக்ஷிதமாகலாமென்கிற தாத்பர்யத்துடன் நாராயண பரமென்பதும் ஸாதித்ததை, ஸ்ரீகண்டர் அந்தராதிகரணத்தில் இந்த 'கப்யாஸ' ச்ருதியைச் சிவபரமாகச்சொல்லி ஆனால் சிவன் த்ரிநேத்ரனாயிருக்க இங்கு 'ஏவமக்ஷிணீ' என்று இரண்டு நேத்ரங்களைச்சொன்னது விரோதியாதோவென ஸந்தேஹித்துக்கொண்டு,

''யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ இதி ஶ்ரோத்ரநேத்ரஸ்ய பரமேஶ்வரஸ்ய நேத்ரத்வயக்ரஹணம் புண்டரீக ஸாத்ருஶ்ய வர்ணநாயம், ந த்ருதீயநேத்ராபாவப்ரதிபாதநபரம் | ததா ஹி—ஶ்ரௌதம் ப்ராஹ்மணம் ப்ரதி அஸௌ புத்ராவஸ்தாநிகத்வாவிதுஷ்ட்யேக ஶிஷ்யஸம்வ்யாக்ரஹணம் ந ஶேஷபுத்ராந்நிஷேதபரம், கிந்து புத்ராபஸ்தாநீஷாத்ருஶ்யபரம் | தத்ராபி | கப்யாஸம் ரஶ்மிபி: விகஸதீதி கவிராதித்ய: தேநாவிகஸிதம் விகஸிதம் புண்டரீகம் யதா ஶோபதே ததா பரமேஶ்வரஸ்ய நேத்ரத்வயம் | த்ருதீயநேத்ரம் து உந்மீலித ஸ்வபாவம் விகஸித புண்டரீகஸாத்ருஶ்யம் ந பவதி | உந்மீலிதபுண்டரீகஸாத்ருஶ்யாபாவாதித்யபிப்ராய: '' (ஸ்ரீகண்-255)

என்று த்வித்வம் த்ருதீய லோசநத்திற்கு விகஸித புண்டரீக ஸாத்ருச்யத்தை நிஷேதிக்க வந்ததே யல்லது த்ருதீய லோசநத்தையே நிஷேதிக்க மாட்டாது ஆனபடியால் சிவ பரமாக யாதொரு குறையுமில்லை யென்கிறார். மேல் 'புண்டரீகாக்ஷ' சப்தம் நாராயண வாசகமாக ப்ரஸித்த மாதலால் பகவத் பர மென்ற ராமாநுஜோக்தத்தைக் கண்டிக்க நினைத்து 'பேதவ்யபதேசாச்சாந்ய:' என்கிற ததநந்தர ஸூத்ரத்தில் 'தஸ்யைவ நாராயணஸ்யைவ புண்டரீகஸத்ருசாக்ஷித்வஸம்பந்தோ யுக்த: புண்டரீகாக்ஷ இதி ப்ரஸித்தே: கிமந்யஸ்ய ப்ரதிபாதந ப்ரயாஸேந இதி சேத்' என்று நாராயணபரமென்று பூர்வபக்ஷம் செய்து, ஸமாதாநத்தில், 'நீலக்ரீவத்வோர்த்வரேதஸ்த்வாதிவிசேஷலிங்கம், பரமேச்வராதந்யத்ர தஸ்யாயோகாத் । புண்டரீகாக்ஷத்வம் ஸாதாரணம் லிங்கம், நாராயணாதந்யத்ராபி தஸ்ய த்ருஷ்டத்வாத், கமலநேத்ரா நாரீ கமலநேத்ர: புருஷ இதி।' என்று 'புண்டரீகாக்ஷ' சப்தம் ஸாமாந்ய புருஷனிடமும் ப்ரயுக்தமாதலால் அது பகவத் பர மென்பதற்கு அஸாதாரண லிங்கமாகாதென ஸமாதாநம் சொல்லுகிறார். ஆகையால் ராமாநுஜோக்தமான பகவத்பரத்வத்தைக் கண்டிப்பதற்காகவே ஸ்ரீகண்டர் இவ்வாறு எழுதியிருப்பதால் ராமாநுஜரை விட ஸ்ரீகண்டர் நவீநர் என்பதற்கு இது ஒன்றே போதுமான ஸாக்ஷ்யமாகும். ராமாநுஜரே அர்வாசீநராயிருந்தால் 'புண்டரீகாக்ஷ' பதம் த்ருதீய லோசநத்தை நிஷேதிக்கா தென்பதற்கும் புண்டரீகாக்ஷத்வ லிங்கம் ஸாதாரணம் என்பற்கும் ஸமாதாநம் சொல்லாமலிருந்திருக்கமாட்டாரன்றோ?

இவ்வாறே 'ஸர்வோபேதா ச தத்தர்சநாத்' (2-1-30) என்றவிடத்தில் 'ஸகலேதரவஸ்துவிஸஜாதீயா பரதேவதா ஸர்வசக்த்யுபேதா' என்று பாஷ்ய பங்க்தி, 'ஸர்வாபி சக்தி: ப்ரஹ்மாச்ரிதேதி விஜ்ஞாயதே' என்று ஸ்ரீகண்ட வயாக்யாநம். இங்கு முதல் யோஜனையில் 'ஸர்வோபேதா' என்பது ஸமஸ்த பதமாயும் 'தேவதா' பதாத்யாஹாரம் செய்துகொள்ள வேண்டுமென்றும் ஏற்படுகிறது. இரண்டாவதில் 'ஸர்வோபேதா' என்பது வ்யஸ்தமாயும் 'தேவதா' பதாத்யாஹாரதோஷமில்லாமலும் இருக்கிறது. ஆகையால் பூர்வ வ்யாக்யாநத்தில் அஸ்வாரஸ்யத்தை வெளியிடவே ஸ்ரீ கண்டர் வேறு விதமாக வ்யாக்யாநம் செய்தார் என்று சொல்ல இடமுண்டு. ஆனால் இந்த மேலுதாஹரித்த பங்க்தியில் ப்ராசீந வ்யாக்யாநத்தில் தோஷத்தை வெளியிடக்கூடிய ஓர் சப்த சகலமுமில்லை. ஆனபோதிலும், அப்பய்ய தீக்ஷிதர் சிவார்க்கமணி தீபிகையில் 9, 10 பக்கங்களில், 'ஸர்வோபேதா ச தத்தர்சநாத்' என்கிற ஸூத்ர ஸ்ரீ பாஷ்ய யோஜனையை எடுத்து இது க்லிஷ்டகல்பநமான 'தேவதா' பதாத்யாஹாரம் கேவலம் கதாநுகதிமாக சங்கர பாஷ்யத்தைப் பார்த்து எழுதியது என்றும், சங்கராசார்யர் மட்டும் அப்

படி எழுதியது உசிதமேயென்றும், அப்படியே 'விப்ரதிஷேதாச்ச' என்கிற பஞ்சராத்ராதிகரண ஸூத்ரத்திலிருக்கும் விப்ரதிஷேத பதம் விஸ்மரண பதத்தில் போல் விரோதார்த்தத்தைச் சொல்லவேண்டியிருக்க 'விசேஷேண ப்ரதிஷேத: விப்ரதிஷேத:' என்கிற அர்த்தத்தை ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்வீகரித்தது க்லிஷ்டமென்றும், அவ்வாறே 'அனுக்ருதேஸ்தஸ்ய ச' என்கிற தஹராதிகரண குண ஸூத்ரத்தை 'தஹராகாசோ ஜீவோ ந பவதி ஜீவானுகாரித்வாத், அனுக்ருதி: அனுகாரித்வயோ: ஸாத்ருஶ்யஸம்பவாத்' என்று ஸ்வரஸார்த்த வர்ணம் செய்வதை விட்டு, 'ப்ரஜாபதிவாக்யோதிதாவிர்ப்பூதாபஹதபாப்மத்வாதிமத்குணகோ விமுக்தபந்த: ப்ரத்யகாத்மா தஹராகாசோ ந பவதி தஹராகாசானுகாரித்வாத்' என்று அர்த்த வர்ணநம் செய்தது 'தஹர உத்தரேப்ய:' என்கிற ஸூத்ரத்திலிருந்து 'தஹர' சப்த வாச்யம் விசேஷ்யமாக அநுவ்ருத்தமாயிருக்கும் பொழுது அத்யந்தோப்ரதீத தர்மியை விசேஷமாக்கியதால் அதிக்லிஷ்டமென்றும், அப்படியே 'ஶாஸ்த்ரயோநித்வாத்' என்கிற விடத்தில் 'ஶாஸ்த்ரம் யோநி: ப்ரமாணம் அத ஏவ ஜகஜ்ஜந்மாதிகாரணம் ப்ரஹ்ம பவதி' என்று எளிதாக யோஜனை செய்வதை விட்டு 'ப்ரஹ்ம ஶாஸ்த்ரப்ரமாணகம்' என்று ப்ரதிஜ்ஞையை அத்யாஹாரம் செய்து கொண்டு 'ஸைத்தாந்திகஸ்யாநுமாநப்ரதிஷ்டாபரிஹாராய-ச அனுமானாதிவிஷயாநுமாநப்ரதிபக்ஷ ஶாஸ்த்ரப்ரமாணகத்வாதிதயேச வயச வஸாநம்' என்றது அத்யந்தம் க்லிஷ்டம் என்றும், இவ்வாறு அங்கங்கு வெகு அஸ்வாரஸ்யங்களிருப்பதாக எடுத்துக் காட்டி இம்மாதிரியான அஸ்வாரஸ்யங்களை நினைத்தே ஸ்ரீ கண்டர் தம்முடைய பாஷ்யாரம்பத்தில் 'பூர்வாசார்யை: கலுஷிதம்' என்று 'ப்ராசீநபாஷ்யாதிப்ரபந்தாநாம் ஸரணீ ந்யாயநோத்காடிதமபி ஸூத்ராக்ஷராநநுஸாரித்வம் தத்தத்ஸூத்ரவ்யாக்யாநாவஸரே விசிஷ்ய பாஷ்யக்ருதா நோத்காடயிஷ்யதே' என்று ஸ்ரீபாஷ்யத்தில் அஸ்வாரஸ்யத்தை விசிஷ்ய எடுத்துச் சொல்லாமலிருந்தாலும், ஸாமாந்ய முகேந வெளியிட்டிருக்கிறார் என்று கூறுவதிலிருந்து ஸ்ரீ பாஷ்யத்தைத் தூஷிக்க வேண்டுமென்கிற தாத்பர்யத்துடனேயே அவ்வாறு சொல்லுகிறார் என்பதால் அப்பய்ய தீக்ஷிதர் வாக்யத்தாலும் ஸ்ரீ கண்டர் அர்வாசீநரென்பதைக் கண்டு கொள்ளலாம். அப்படியாகில் ஓரிடத்திலாவது ஸ்ரீ பாஷ்யத்திலிருக்கும் அஸ்வாரஸ்யத்தைக் கண்டாரேவண ராமாநுஜர் இம்மாதிரி சொல்வது அயுக்தம் என்னலாகாதோ வெனில், இதற்கும் ஸமாதாநம் அப்பய்ய தீக்ஷிதரே சிவார்க்கமணி தீபிகை 9-வது பக்கத்தில் 'அப்படி

யாகில் ஆக்ரஹத்துடன் எழுதியதென்று யாவராலும் நிந்திக்கப்படும் அது நம்முடைய பாஷ்யத்திற்கு அழகல்ல'வென்று 'தயாவதி கெஷாம் விதாம ஹ ஹ வரதாதாம் ஹாஷ்யாதி முஃயவதிதவி ஹாஷ்யம் வளரொஹாமயாரா வமும்பநம் ஹ்யாக த அ தஷலுக்தூதெயகூதிதி ஹுமெஸ்ரீவ்யாவநாய ஸ்ரீ கணெநெதி ஹுநாஉகீதஉதழ' என்று வெளியிட்டிருக்கிறார். இவ்வாறு அப்பய்ய தீக்ஷிதருடைய வாக்யங்களைக்கொண்டும் ராமாநுஜர் ப்ராசீநரென் பதை அகாமனும் அங்கீகரிக்கவேண்டும்.

ஆனால் 'ஜிஜ்ஞாஸா' பத்ரிகையில் இதற்கு மாறாக ஸ்ரீகண்டர் ப்ராசீநர் என்பதற்கு யுக்திகள் சொல்லப்பட்டிருக்கின்றனவே யெனில் அவைகளை இங்கு சற்று விசாரிப்போம்.

அதில் சொன்ன முதல் யுக்தியாவது:—(ஸ்ரீகண—26—) 'ஶிவ ஸகொயெ்யஃ ஶிவங்கரः......' என்பதால் சிவசப்த வாச்யவஸ்துவெ த்யே யமென்றும் தத்வநிரிக்தன் அத்யேயனென்றும் சொல்லி 'அதஃ ஶிவ ஸவ வாும் ஹுஹு ஶொக்ஷகாஶெய்உ-ஶா தவெஹா ஜுாதவ்யெஹதி' என்று ஸ்ரீகண் டர் சொன்னதைக் கண்டிருக்கும்போது ராமாநுஜர் 'வாதஸவ ஹதிவா உநவாநாராயணாதஃவாகஹிஸதஸவவாாः கெஷுஜிதுவாஹநாதி வியி வரெஷுா வாகெ்யஷு ஶுதாः ஹஜாவதி ஶிவெம ஊகாஶ ஹாணா திஶஹாः' என்று சிவ சம்ப்வாதி சப்தங்கள் ஸாமாந்ய சப்தங்களாதலால் அவை களைத் தத்வ ப்ரதிபாதநத்திற்கென வேற்பட்ட நாராயணாநுவாக ஸித்த நாரா யண பரமாக யோஜநை செய்யவேண்டுமென்று சொல்லியிருப்பதாலும், அப் படியே 'ஶிவவ்யதிரிக்தஹ்ய உடைக்ஷுணாம் யெ்யகஸவம் வரிஹம்வஹாயதெ' என்று ஸ்ரீகண்டர் சொன்னதை 'ஸகொஹ வெ நாராயண ஆஸீதிதி ஹரஷிவாகெ்யாதிதம் நாராயணஸெவ ஸஉநவாகாணஹாः.........ஸாயா ாணாஃ ஸஹு ஹாதாதிஶஹாः ஹதிவாஉயஞி' என்று ராமாநுஜர் நிரஸநம் செய்கிறார் என்றும், இதை நன்கு பராமர்சிக்குங்கால்—உபாஸநவிதி வாக்யங் கள் உபாஸநாவிதாயகங்களாகையால் அந்யபரங்களென்றும், தத்வப்ரதிபாதக வாக்யம் தத்வப்ரதிபாதநாம்சத்தில் அநந்யபரமென்றும் அந்யத்ர சொல்லி யிருக்கிறபடி விதிவாக்யங்களிலிருக்கும் ஆகாச சிவேந்த்ராதி சப்தங்களை நாராயணபரமாக மாற்றவேண்டுமென்கிறார் ராமாநுஜர் வேதார்த்தஸங்க் ரஹத்திலும் (271) ஸ்ரீ பாஷ்யத்திலும் (2-2-35).

இவ்வபிப்ராயத்தாலேயே அவ்விடத்திய ச்ருத ப்ரகாசிகையில் 'ஸவம் நாராயணஶஹும் ஹுதி ஶம்ஹுஶிவாஉயஃ ஸாஉாநஹஶஹாः' என்று கூறி யது. ஸ்ரீகண்ட பாஷ்யத்திலோ, 'உபாஸநாபரமென்றும் தத்வப்ரதிபாத

221

ந்பரமென்றும் வாக்யங்களை இருவகையாகப் பிரிக்கலாகாது. எது விதி பரமோ அதுவே தத்வ ப்ரதிபாதநமும் பண்ணக்கூடியது' என்று ஸமந்வயாதி கரணத்தில் ஸ்தாபித்துக்கொண்டு ஜ்ஞாநவிஷயபூதமாகவே உபாஸநம் விதிக்கப்படுகிறதென்று சொல்லி, 'ததா ஸர்வம் ஶிவாயாம்' என்று தொடங்கி 'அத: ஶிவ ஏவ ஸர்வம் ப்ரஹ்ம லோகாகாஶே த்யேயோ த்யாதவ்யோ ஜ்ஞாதவ்ய இதி ஶ்ருதி' என்று விதாயக வாக்யமே தத்வ போதகமாகலாமாகையால் அங்கு 'ஶிவ ஏகோ த்யேய: ஶிவங்கர: ஸர்வமந்யத் பரித்யஜ்ய' என்று சிவ வ்யதிரிக்தனுக்கு அத்யேயத்வமும் சிவனுக்கு த்யேயத்வமுமிருப்பதால் சிவனே த்யேயனாகலாமாகையால், 'ஶிவவ்யதிரிக்தஸ்ய ஸர்வலக்ஷணாநாம் த்யேயத்வம் ப்ரதிஷித்யதே' என்கிறார். இங்கு 'த்யாதவ்யோ ஜ்ஞாதவ்ய:' என்பதால் த்யாந விதி வாக்யம் வேறாகவும் ஜ்ஞாந போதகவாக்யம் வேறாகவும் கொள்ளவேண்டியது அவச்யமில்லையென்று சொன்னதாயிற்று. இத்தால், தத்தத் விதி வாக்யங்களிலேயே தத்வ ஸ்வரூபம் போதிதமாயிருக்க அதை ஸாமாந்ய பரமாகக் கொள்ளவேண்டாமென்கிறார். இவ்வளவால் ராமாநுஜ க்ரந்தத்திற்கு இது ஸ்பஷ்டமாக கண்டநமாயிருக்க எவ்வாறு இதை ராமாநுஜர் கண்டிக்கிறார் என்பது. அப்படியே 'ஶிவவ்யதிரிக்தஸ்ய த்யேயத்வம் ப்ரதிஷித்யதே' என்று ஸ்ரீகண்டர் சொன்னதற்கு 'ஸ்ருஷ்டிவாக்யோதிதம் ஸ்ரஷ்டாரம் நாராயணமேவ ஸமாநப்ரகரணஸ்தா:' இத்யாதியான ராமாநுஜ வாக்யம் கண்டநமென்றதும் அவிசாரித ரமணீயம். 'ஶிவவ்யதிரிக்தஸ்ய த்யேயத்வம் ப்ரதிஷித்யதே' என்பதற்கும் 'ஸ்ருஷ்டிவாக்யோதிதம்' இத்யாதி வாக்யத்திற்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை. உபாஸநா விதி வாக்யங்களில் அவை அந்ய பரமாகையால் அநந்ய பர நாராயணநுவாகாநுகுணமாக நயநம் செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டு, காரண வாக்யங்களில் எப்படியென்று ஸந்தேஹம் பிறக்க காரணவாக்யங்களில் பூர்வ பூர்வங்கள் ஸாமாந்ய சப்தங்கள் என்றும் உத்தரோத்தரம் விசேஷ சப்தங்களென்றும் சொல்ல நினைத்து 'யதா ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் இதி ஸ்ருஷ்டிவாக்யோதிதம்' இத்யாதி ஸாதித்திருக்கிறார். ஆகையால் இதைக் கொண்டும் ஸ்ரீகண்டர் அர்வாசீநர் என்றே முடிந்தது.

'ஸோऽந்தராதந்தரம் ப்ராவிஶத்' என்று 'ஸர்வஸ்ய ஸ்வாத்மதயாந்த:ப்ரவேஶப்ரதாநாத்' என்று ஸ்ரீகண்டர் சொன்னதை 'யத்வாநந்யஶிரஸி ப்ரதாந ஸ்வஸ்வவ்யவஸ்தித ஸ்வஸாம்யம் வ்யவஸ்திதம் தத் ஸோऽந்தராதந்தரம் ப்ராவிஶதிதி ஸ்வாத்மத்வ ப்ரவேஶாதிதி ஶ்ருத்யைவ வ்யக்தம்' என்று ராமாநுஜர் கண்டிக்கிறார் என்பது இரண்டாவது யுக்தி. இதுவும் யோசித்தால் விபரீதமே. அந்த ராமாநுஜருடைய பங்க்தியில் 'ஶ்ருத்யைவ

வ்யக்தம்' என்பதால் 'ஸோஹம் நித்யா நித்யோஹம்' என்று பின்னும் ருத்ரவாக்யாநுவ்ருத்தி யிருப்பதால் இது ருத்ரவாக்யமே யென்பது ச்ருதியைக் கவனித்தால் தெரியுமென்று கூறப்பட்டது. ஸ்ரீ கண்டரோ 'நாந்ய: கச்சிந்மத்தோ வ்யதிரிக்த இதி' என்பதுடன், இதி காணத்தால் ருத்ரவாக்யத்திற்கு ஸமாப்தி தோன்றுவதால் இது ச்ருதிவாக்ய மென நினைத்து, அப்போது 'ததோ தேவா ருத்ரம் நாபச்யந், தே தேவா ருத்ரமத்யாயந், ததோ தேவா ஊர்த்வபாஹவ: ஸ்துவந்தி' என்று சிவன் உபக்ராந்தனானபடியால் 'ஸோந்தராதந்தரம்' என்கிற ஸர்வாத்மாநுப்ரவேசமும் அந்தப் பரமேச்வரனுக்கே என்று ச்ருதி சொல்லுகிற தெனத் தெரிவிக்கவே 'ஸர்வேச்வரமேவ' என்று சொல்லுகிறார். இது ருத்ரவாக்யமாயிருந்தால் அந்ப பரமாக வழியுண்டு. ச்ருதிவாக்ய மாதலால் உபக்ரமாநுஸாரேண பரமேச்வர பரமே என்பது அவர் கருத்து. இவ்வபிப்ராயத்தை ஸ்தாபிக்கவே வாக்யாந்வயாதிகரணத்தில் 'வ்யமேவதேவ' என்றாரம்பித்து, இவ்வாக்யம் முழுவதையும் உதாஹரித்து 'விதீயவதேவ' என்று தொடங்கி 'யோவை ருத்ர: ஸ பகவாந் யச்ச ப்ரஹ்மா தஸ்மை வை நமோ நம:' இத்யாரப்ய ப்ரஹ்மவிஷ்ணுஸ்கந்தேந்த்ராதிநாயகாதி ஸவஸூ ஸர்வேஷாமத்யக்ஷம் ஸர்வஜீவாதாரதே' என்று 'யோவை ருத்ர:' என்ற வாக்யத்தை உதாஹரித்தது. ராமாநுஜர் சொன்ன ரீதியில் இதை ருத்ரவாக்ய மென வைத்து நாராயண பரமாக்கலா மென்கிற ஸந்தேஹ மில்லாம லிருந்தால் 'ஸர்வேச்வரமேவ' என்று ஏவ ப்ரயோகமும் வாக்யாந்வயாதிகரணத்தில் 'யோவை ருத்ர:' என்கிற வாக்யோதாஹரணமும் 'ப்ரஹ்மவிஷ்ணுஸ்கந்தேந்த்ராதிநாயகாதி' என்றதில் விஷ்ணுவுக்கு நிவேசமும் அநாவச்யகமாய் முடியும். ஆகையால்தான் இது ருத்ரவாக்யமல்லவென்று ஸ்ரீகண்டர் அபிப்ராயப்பட்டதைக் கண்டித்து 'ஸ்துவந்தி, ஸோந்தராதி' என்று அத்யாஹாராதி தோஷதுஷ்டமாகையால் இதுவும் ருத்ரவாக்யமே என்று ராமாநுஜாக்தத்தை ஸ்தாபிக்கவேண்டிய ஆவச்யகதை தத்வ்யாக்யாதாவான ஸ்ரீ ஸுதர்சநஸூரிக்கும் அதற்கு மேலும் ஸமாதாநம் சொல்லும்படியான ப்ரஸக்தி அப்பய்ய தீக்ஷிதருக்கும் நேர்ந்தது.

'ஸம்ஜ்ஞாதாச' (1--4--27) என்கிற ஸூத்ரத்தில் 'யதா தஸ்மை ஹ்ருதிவா' என்கிற வாக்யத்தை உதாஹரித்து வ்யாக்யாநம் செய்து சிவனே பரமகாரண மென்கிறார் ஸ்ரீகண்டர். அதே அதிகரணத்தில் ராமாநுஜர் அதே வாக்யத்தையும் உதாஹரித்து ஸுபாலோபநிஷத் வாக்யத்தைக்கொண்டு எல்லாவற்றையும் நாராயண பரமாக்குகிறார் என்று, ஸ்ரீகண்டர் நாராயண பரத்வ பூர்வ பக்ஷத்திலெல்லாம் புருஷ ஸூக்தத்தையும் நாராயணாநுவாகத்தையுமே எடுத்திருக்கிறாரே யல்லது ஓரிடத்

திலாவது ஸுபாலவாக்யத்தை எடுத்தும் கண்டிக்க வில்லையென்று மூன்றாவது யுக்தி. இது அகிஞ்சித்கரம். ஒருவர் இரண்டு வாக்யங்களைக் கூறலாம். மற்றொருவர் ஐந்து ஆறு வாக்யங்களையும் எடுத்துக் கொள்ளலாம். இதைக்கொண்டு மாத்ரம் பரஸ்பர ஸம்பந்தம் நிச்சயித்து விட முடியுமா? உதாஹரணமாக ஸ்ரீகண்டர் ஜாபால சதருத்ரீயாதி வாக்யங்களை எடுக்கிறார். ராமாநுஜர் அம்மாதிரியான வாக்யங்களை உபேக்ஷித்துவிட்டார். அப்படியே ஸ்ரீகண்டரும் ஸுபாலவாக்யத்தை உபேக்ஷித்திருக்கலாமானதால், இது ஒரு யுக்தியாகாது. ஏன் அப்படி உபேக்ஷிக்க வேண்டுமென்றால் அவர்களின் இச்சையே நியாமகம். அது இல்லாமலேயே ப்ரக்ருத கார்ய நிர்வாஹமாய் விட்டதாக அவர்கள் நினைத்தால் அவர்களை யார் தடுப்பது? இவைகளைத் தவிர 'ஜிஜ்ஞாஸா' பத்ரிகையில் சொன்ன மற்ற யுக்திகளுக்கு முன்பே இங்கு ஸமாதாநம் சொல்லப்பட்டு விட்டது. சரித்ரஸம்பந்தமாக எடுத்த ஓர் யுக்தி மிகவும் ஸ்தூலமானது.

இவ்வளவால், அநந்யதாஸித்தமான ஸ்ரீகண்ட வாக்யங்களைக்கொண்டும் அப்படிப்பட்ட அப்பய்ய தீக்ஷிதருடைய வாக்யங்களைக்கொண்டும் ஸ்ரீகண்டர் அர்வாசீநரென்பதை ஸ்தாபித்து அதற்கு அநுகுணமாக வேதாந்த ஸார பங்க்தியையே ஸூத்ரார்த்த நிரூபண காலத்தில் அவர் பெரும்பாலும் உபயோகப்படுத்தியிருக்கிறாரென்பதையும் நன்கு நிரூபித்தோம். இப்படியே 'ஜாதஶ்சக்ஷும் ஜவதி' என்று பூர்வம் ப்ரதிஜ்ஞாதாம்சத்தை விவரிக்கும் போது ராமாநுஜர் அநுஸரித்த ரீதியையும் பாதாரப்பத்திலும் அத்யாயாரம்பத்திலும் பூர்வோக்தாம்ச ஸங்க்ரஹம் செய்வதையும் உவரி வக்ஷ்யமாணாம்ஶ ஸங்க்ரஹம் செய்வதையும் ஸ்ரீகண்டர் பின்பற்றி யிருக்கிறார் என்பது ஸ்பஷ்டம்.

இவ்வாறு அப்பய்ய தீக்ஷிதர் பல விடங்களில் இவ்வம்சத்தை அங்கீகரித்திருப்பினும் சிவார்க்கமணி தீபிகை (பக்கம் 12-ல்) 'வாிவ-ராஅா யெ-ர: கலுஷிதம்' என்கிற ச்லோக வ்யாக்யாநாவஸரத்தில் பூர்விகர்களால் ஸூத்ரார்த்தம் கலக்கப்பட்டுவிட்டது என்று சொல்லி அதற்கு உதாஹரணமாக ஸ்ரீ பாஷ்யத்திலிருந்து 'ஸவெ-ராவெதாஅ தஜஸ-ரநாக' என்றிது முதலான நான்கு ஸ்தலங்களை எடுத்து நிரூபித்துக்காட்டி இவ்வாறு கலக்கப்பட்டதை ஸமீகரணம் செய்யவே ஸ்ரீகண்ட பாஷ்யமெழுந்தது என்று நிரூபித்துவிட்டு, கடைசியில் இங்கு பூர்வாசார்யர்கள் என்று ஸ்ரீகண்டர் சொன்னது ராமாநுஜர் முதலியவர்களைக் குறித்து அல்ல; கிம்து 'ஜவஊவ-ராசீந ஹாஷ்யாதி வு ணெதரூணாம் யெ வாிவ-ர வாிவ-ர உவஷெஷா: தாநஜிஶ்ய வாிவ-ராஅா யெ-ர: கலுஷிதவிதஶ்ரு'' என்று ராமா

நுஜருக்கு உபதேசகர்களான பூர்வீகர்களைக் குறித்து என்கிறார். அப்படியே ஆநந்த லஹரியில் 'ஶ்ருஅாய-உஹாஷ்யதத்தூ-நாகமணெ,ந வ்ய வரத்தஸ்ய ஶாஜா நாஜஹாஷ்யஸ்ய' என்றும் 'சுநநஸ்வ்ய திஷகுவஜ்ஞாவ,நாய ஸ்வஸ்ய ஸ்வ்ய்தி ஷ்கெவாக்தி: ஊதி விஶிஷ்டாெைவதவாதிஹி: வெைஷ்ண வெைஶாக்தம் ஸ்ரீகணாஅா யெ-உறெவ ஸ வம்யா உபிஉதை:' என்றும் சொல்லுகிறார். ஆகையால், ஸ்ரீகண்டர் நவீநர் என்பது எவ்வாறு எனில், அப்பய்ய தீக்ஷிதர் நம்மைவிட ஸ்ரீகண்டாதிகளுக்கு ஸந்நிஹிதரானபடியால் அவருடைய வாக்யத்திற்கு விசேஷ கௌரவமிருக்கவேண்டிய தவசியமே ஆயினும் ஸ்ரீகண்ட க்ரந்தத்தில் மாத்ரமன்றிக்கே சிவார்க்கமணி தீபிகையிலும் ஸ்ரீபாஷ்ய வேதார்த்த ஸங்க்ரஹங்களின் பங்க்திகளை அக்ஷரஶ: அநுவதித்து அவதாரிகை வைத்தும் கண்டித்து மிருப்பதை நன்கு நிரூபித்திருக்கிறோம். 'வஶிவஉாஅாயெ-உ: கலுஷிதம்' என்றவிடத்திலும் இந்தக் காலுஷ்யம் எவ்வாறென தென்பதை ஸ்ரீபாஷ்ய பங்க்திகளை எடுத்துக் காண்பித்து அதற்குக் கண்டநம் ஸ்ரீகண்ட பாஷ்யத்திலிருப்பதை எடுத்து வெளியிட்டிருக்கிறார். இப்படியிருக்க ஸ்வவாக்யத்திற்கு விரோதமாகத் தாமே இம்மாதிரி எழுதினால் நாம் அதற்கு எவ்வாறு ஸமாதாநம் சொல்ல முடியும்? 'வஶிவஉாஅாயெ-உ: கலுஷிதம்' என்கிற காலுஷ்யம் ப்ராசீநர்களின் க்ரந்தத்தைக் குறித்ததாகில் அவைகளை என் இவர் இங்கு உதாஹரித்திருக்கக் கூடாது? அர்வாசீநமான ஸ்ரீ பாஷ்ய க்ரந்தத்தை என் உதாஹரித்திருக்கவேண்டும்? ஆகைபால், தான் உதாஹரித்த, வாக்யத்திற்கு விரோதமாகத்தானே இவ்வாறு கூறுகிறார் என்பதற்கு நாம் ஸரியான ஸமாதாநம் உண்மையில் சொல்லக்கூடவில்லை. ஒரு ஸமயம் ஸ்ரீ கண்டர் எதைப்பார்த்து எழுதினாரோ அந்த க்ரந்தங்கள் எல்லாம் லுப்தமாய் விட்டபடியால் அவைகளை அநுஸரித்த ஸ்ரீ பாஷ்ய பங்க்திகளை அப்பய்ய தீக்ஷிதர் உதாஹரிக்கவேண்டியதாயிற்றெனில் இதைத்தான் அவர் எங்காவது சொல்லிவிடலாகாதோ. அது உண்மையாயினும் ஸ்ரீ கண்டரால் அநுவதிக்கப்பட்ட பாகங்களுக்கும் ஸ்ரீ பாஷ்ய வேதார்த்த ஸங்க்ரஹ பங்க்திகளுக்கும் விசேஷ ஸாம்யமிருப்பதை வேறு காரணங்களால் ஸமர்த்திக்க வேண்டும். இவ்விஷயத்தில் ஓரியண்டல் ரிஸர்ச் பத்ரிகை ஓர் ஸமாதாநம் கூறுகின்றது. அதாவது—உண்மை இவ்வாறிருப்பினும் அப்பய்யதீக்ஷிதருடைய சைவாபிமாநமானது இவ்வாறு அவரைச் சொல்லும்படி தூண்டியது என்று. இந்த ஸமாதாநத்தை நாம் விரைவில் ஏற்றுக்கொள்ள ப்ரியப்பட வில்லையாயினும் முடிவில் அதையே நாமும் அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. அப்பய்ய தீக்ஷிதருக்கு சைவாபிமாநம் அப்படிப்பட்ட தென்பது 'ஸ்வஸ்வஸ்வ்யதிஷ்ாகெவாக்திரிதி விஶிஷ்டாெைவதவாதிஹிவெ-உஷ்ண வெைஶா-கூ; ஸ்ரீகணாஅாயெ-உறெவ ஸ வம்யா உபிஉதை:' இத்யாதி வாக்யத்தால்

ஸ்பஷ்டம். இவர் கிஞ்சித் பக்ஷபாதத்துடன் ப்ரவர்த்தித்திருக்கலாமென்றும் சுத்தாத்வைத மார்த்தாண்டகாரரும் அணு பாஷ்ய வ்யாக்யாதாவும் ஸர்வாத்ம நா மதாந்தர த்விஷ்டர்களாகையால் யாதொரு பக்ஷபாதமும் அவர்களுக்கு இவ்விஷயத்தில் இருக்க இடமில்லையென்றும் நிச்சிதமாகையால் அப்பய்ப தீக்ஷிதருடைய வாக்யங்களைவிட அவர்களுடைய வாக்யம் ப்ரக்ருத விஷயத் தில் ப்ரமாணதரமாகுமென்பது மத்யஸ்தர்களறிந்த விஷயம். ச்ருதப்ரகாசி கையில் ஒவ்வொரு அதிகரணந்தோறும் முடிவில் இதர மதங்களை நிரஸித்து வரும்போது ஓரிடத்திலாவது ஸ்ரீகண்ட மதத்தின் அநுவாதமில்லையாதலால் தாவத் பர்யந்தமும் ஸ்ரீகண்ட க்ரந்தம் விசேஷ ப்ரசாரத்தை யடையவில்லை யென்று சொல்லவும் இடமுண்டாகிறது. ஆகையால் ஸர்வ விஷயத்திலும் ஸ்ரீகண்டபாஷ்யம் ராமாநுஜ க்ரந்தார்வாசீநமென்பது ஸித்தம்.

[illegible] ।
[illegible] ॥

ஸ்ரீ:

க்ருத்திகா தீபோத்ஸவ விசாரம்.

[ஸ்ரீ. உப. வித்வந் கருடபுரம் தி. ஈ. ஸ்ரீநிவாஸாசார்யர்]

[illegible] ।
[illegible] ॥

இவ்வர்ஷம் கார்த்திகை மாதத்தில் செவ்வாய்க்கிழமையில் திருக்கார்த்திகை உத்ஸவத்தைப் பௌமவாரதோஷத்தை அநாதரித்துச் சில ஜ்ஞாதாக்கள் கூட அநுஷ் டித்தது தவறுதலாகையால், இனியாவது, இவ்வாறு நேருங்காலத்தில் பௌமவாரத் தை வர்ஜித்து மறுதினமே அநுஷ்டிக்க வேண்டுமென்பதைத் தீபிகை (4-வது ஸஞ்.) வாயிலாகத் தெரிவித்ததாக ஒருஸ்வாமி திருவுள்ளம்பற்றி, அவ்விஷயமாகக் கொஞ்சம் விசாரம் பண்ணி எழுதியிருந்தார். அதில் கொஞ்சம் சர்ச்சை பண்ணவேண்டிய விஷயங்களை அடியேன் புத்திக்கு எட்டின வரையில் விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

இந்த ஸம்வத்ஸரத்தில் புதன்கிழமை தினம் பௌர்ணமியாவது க்ருத்திகை யாவது கலாமாத்ரமும் இல்லை. ப்ரதமை 13-நாழிகை இருந்தது. திங்கட்கிழமை சதுர்த்தசி பரணி வேதை திதி நக்ஷத்ரங்களுக்கு இருந்ததால், பக்ஷபாதத்தை விட்டு, மத்யஸ்தாச்ரயணம் ந்யாய்யமென்றே தோன்றுகிறது. தசநிர்ணய வசநத்தால் பௌம

வாரத்துக்குப் பாக்ஷிகமாக த்யாகம் ஏற்படுகிறதே யொழிய நியதம் ஏற்படவில்லை அதாவது: 'வவ-ுய-ட்கெ விவஜ்ஷ்-ு ஷ்ராஹூஎளஉஉணு்ஷிநெ யதி। கூவஜெ ஷிவஷெ கூ-ய-ுாக கூரதிகாயா உஹொதஷவ:।' என்றும், 'ஷ்ராதவ-ுய-ட்கெ விபிஷ்ய-ுஹெ ஹளஉஷிநம் தஷ்ஜெக।' [இரண்டு திநத்தில் பர்வஸம்பந்தம் இருக்கும்போது பௌமவாரத்தை விடக்கடவன்] என்கிற ஸ்பஷ்டார்த்தக வசநத்துக்கு அநுகுணமாக 'வவ-ுய-ட்கெ கூணுஷிநெ ஷதி' [பர்வத்தோடு கூடிய இரண்டாவது திநம் லபிக்கும்போது] பௌமவாரம் வர்ஜ்யம். 'ஹளஉம் யதி' என்பதால்; பௌமதிநமல்லாத போது முக்யமாகத் தீப காலவ்யாப்தியுள்ளதாகையால், சுத்த பர்வமுள்ள முதல் திநமே க்ராஹ்யம் என்பது ஸித்திக்கிறது. இரண்டு திநத்தில் பர்வ ஸம்பந்தமிருந்தால் மறுதிநம் க்ராஹ்யமென்கிற தசநிர்ணயத்தில் எடுத்த வசநங்கள் முதல் நாள் சதுர்த்தசீ வித்த பர்வ விஷயம். சுத்தமாநதால் பூரணத்தை விடலாகாது. 'கூவஜெ ஷிவஷெ கூ-ய-ுக கூரதிகாயா உஹொதஷவ:' பௌமதிந தோஷத்தால் முதல் திநத்தில் விடப்பட்ட உத்ஸவத்துக்கு 'கூணுஷிநெ வவ-ுய-ட்கெ' என்று முன்பு ஸாகூதமாகச் சொன்ன அர்த்தத்தை அநுஸரித்துப் பரதிநத்தில் பண்ணக்கடவன் என்று காலம் விதிக்கப்படுகிறது. இப்படிச் சொன்ன விஷயங்களை ஸ்வபக்ஷத்தை ஸாதித்துக் கொடுப்பதாக எண்ணி, வசநங்களை மாத்ரம் எடுத்து அதன் அர்த்தத்தை விவரிக்காமலே பௌமவாரத்தில் அநுஷ்டாநத்தைத் தவறுதலாகச் சொல்வது எப்படி உசிதமாகும்? ஏகதிந பௌர்ணமியில் கூட நியமேந பௌமவாரம் த்யாஜ்யம் என்கிற பக்ஷத்தில் 'உஷிஹெ வவ-ுய-ட்கெ', 'வவ-ுய-ட்கெ கூணுஷிநெ।' என்கிற இரண்டு வசநங்களிலுள்ள பதங்கள் வ்யர்த்தமாகும். 'வவ-ுய-ட்தஉவி தஷ்ாஜஷ்ம் ஹளஉாஹம் ஷ்வ-ுஉா ஹவெக' என்றிறே அப்போது இருக்கவேண்டியது.

கிஂச—பர்வமாவது க்ருத்திகையாவது இல்லாத கேவல ப்ரதமையிலும் அநுஷ்டாநம் ஸாது என்னும் பக்ஷத்தில், 'வவ-ு ஹணயா-ட்கம் தெஷா தீவொதஷவொ உத:। கூ-ய-ுாதஜெ ஹிகஷுபாவஷி ஹம்வவ-ு வா யதி।' என்று உபராக தினத்தில் நிஷேதிக்கப்பட்ட உத்ஸவத்தைத் திதி நக்ஷத்திரங்களுக்குள் ஒன்று இருந்தாலும் மறுதிநத்தில் பண்ணக்கடவன் என்கிற வசநமும் விரோதிக்கும். பௌமவாரத்தால் விடப்பட்டால் மாத்ரம் திதி நக்ஷத்ரங்கள் ஒன்றுமில்லாமலும் அநுஷ்டிக்கலாமென்று வசந மில்லாத போது ஸ்வேச்சா மாத்ரத்தால் நியமிக்கலாமா? 'வஜெஹி' என்கிற பதத்துக்குத் 'திதி நக்ஷத்ரங்கள் இல்லாத திநம்' என்று அர்த்தமாகுமா? ப்ரத்யுத வசநாந்தரத்தை அநுஸரித்துத் திதியாவது நக்ஷத்ரமாவது கலாயுக்த மறுதிந மென்று அர்த்தம் சொல்வதே ப்ராமாணிகமாகும். 'கூஹிஹம் வவ-ு வா யதி' என்பதால் இல்லாதபோது பூர்வ திந தோஷம் ஸஹ்ய மென்று த்யோதிதம். அந்த ந்யாயம் இங்கும் துல்யம். ஆகையால், 'வணிுஉா திவதயநள அம் ஹம் வஷய-ுதெ யத:। ஶ்ஷஉாவணிுஉாஜெ்யா.........।', என்கிற ஜ்யோதிஷ வசநம், தீப காலத்தில் பர்வ மில்லாவிட்டாலும் ஸந்தி திநத்தில் அநுஷ்டிக்க அநுஜ்ஞை

227

பண்ணுகிறது. இப்படியே ஸார்வ பௌமருக்கும் தாத்பர்யம். 'நந-வவ-ஜீவாரொ வணகாரெ நாஷ்தி ஜெஹ;உஷயகாஜீநஷ்ஷ தஷ்ஷ நக்ஷத்ரஷ்ஷ வா ஜரெ தைஜுஸிஷ-வஜாஸாயம் வஜாவுசெவுந கவவ-உணிகூதொஜீவ: ஐதஷ் ஷஜாநவகாபபாக' என்கிற வாக்யத்தாலே இது ஸித்தம். தீபகாலத்தில் பர்வமில்லா விட்டாலும் ஜலத்தில் தைல பிந்து போல் உதயத்திலிருக்கும் திதி நக்ஷத்ரங்களுக்கு ஸாயங்கால வ்யாப்தி ப்ராமாணிகமாகையால் 'கவவ-உணி கூதொ ஜீவ:' என்கிற வசநப்படி நிஷேதம் ப்ரவ்ருத்திக்காதாகையால் அந்தத் திநம் . க்ராஹ்ய மென்றும் வாக்ய தாத்பர்ய மாகையால், உதயகாலத்தில் கூட திதி இல்லா விட்டால் 'கவவ-உணி' என்கிற நிஷேத சாஸ்த்ரம் ப்ரவ்ருத்திக்கு மென்று த்யோதித மாகிறது. ஸாயங்கால வ்யாப்த ப்ரதமைக்கே பர்வ ஸம்பந்த மில் லாத திநத்தில் க்ராஹ்யதை ஸித்தியாதபோது 'யாம த்ரிஷம ஸஉந-வுராவஷ' என்கிற வசநத்தால் ப்ரதமைக்கு ஸாயாஹ்ந வ்யாப்தியைப் பாவித்து அதையும் காலமாகச் சொல்வது எவ்வாறு பொருந்தும்? அது கைமுதிக ந்யாயத்தாலே அஸங்கதம். உபதிஷ்ட தர்மாதாரத்தில் காட்டில் அதிதிஷ்ட தர்மாதாரத்துக்கு வைஷம்யம் ஸ்வத: ப்ராப்த மாகையால் பௌர்ணமியில் சொன்ன விதியெல்லாம் ப்ரதமையில் வைத்துக்கொள் வதும் சரியன்று. எந்தத்திதி உதயத்திலிருந்தாலும் அது அஸ்தமனத்திலிருப்பதாகச் சொல்லுகிற தானல் 'கூஷ்ண வக்ஷெ திஷம-உஹஷா யவஜாஷோஷிதொ ரவி:' என் கிற விசேஷ வசநத்தால் க்ருஷ்ண பக்ஷத்தில் அஸ்தமன காலத்துத் திதியை அன்றைதி நம் முழுவதும் இருப்பதாக பாவிக்க ஸாதிக்கையால் அன்றை திநத்தில் த்விதீயை யாக வே ஸித்திப்பதால் ப்ரதமா தீபாரோபணப்ரஸக்தி தலை காட்ட அவகாசமில்லை. ஒன்றுக் குச் சொன்னதை எல்லாவற்றுக்கும் வைத்துக்கொள்வதானல் வாரத்தில் நக்ஷத்ர ஸம்பந்தத்தால் வரும் யோகமும், யோகிநியில் திதி நியமத்தால் வரும் கால வ்யவஸ்தையு மெல்லாம் வ்யாகுல மாகும். ஸங்க்ராந்தி தோஷம் ஒரு மாஸத்தில் இரண்டு திதி இரண்டு நக்ஷத்ரம் வரும்போது தான் வர்ஜ்யமாகக் காண்கிறோம். ஒன்றே இருந்தால் தோஷ மென்று அதைவிட்டு அதில் விஹித தர்மங்களை மறுதிநம் அநுஷ்டிப்பதைக்காண் கிறோமில்லை. ஏகாதசீ வித்தமாகும்போது கேவல த்வாதசியை! வ்ரதகாலமாக விதித்த ஸ்பஷ்டவசநம்போல் இங்கே கேவல ப்ரதமையில் திதி நக்ஷத்ரமில்லாதபோதும் தீபோத் ஸவம் பண்ணலா மென்று வசநம் காணப்படாததால் அதை த்ருஷ்டாந்தமாக எடுத்த தும் ஸங்கதமாகாது. 'ஜீவொத்ஸவம்' என்று ப்ரயோகிக்காமல் 'கூத்திகாயா உஹொத்ஸவம்' என்று உத்ஸவத்துக்கு க்ருத்திகா ஸம்பந்தம் தோன்றும்படி இருப்பதால் பர்வ மில்லாதபோது க்ருத்திகையாவது அவச்யம் என்கிறது வ்யஞ்ஜிதம்.

ஆகையால் இனிமேல் இந்த ஸம்வத்ஸரம் போல் பௌம வாரத்தில் தீபோத்ஸ வம் ப்ராப்தமானல் அந்தத் திநத்திலே நிச்சங்கமாக ப்ராமாணிகர்கள் அநுஷ்டிப்பார்க

னென்றே எண்ணுகிறேன். இத்தால் பௌம வாரத்திலும் மறுதினத்திலும் பர்வ க்ருத்திகைகள் இருந்தாலும் மறுதினத்தில் அந்யதரம் இருந்தாலும் மறுதினமே க்ராஹ்யம். அப்படி இல்லாதபோது ஷடகடிக மாத்ரவர்த்தி திதி நக்ஷத்ர முள்ள பௌம வாரம் அநுஷ்டாந பர்தகமாகா தென்கிற பெரியோர்கள் திருவுள்ளத்தை விவரித்த அடியேனுடைய லேகநத்தைப் பெரியோர்கள் உகந்தருள்வார்கள் என்றே விச்வஸிக்கிறேன்.

மேல் ஸம்வத்ஸரத்தில் க்ருத்திகா தீபோத்ஸவத்தை ப்ராஜ்ஞர்கள் பூர்வமேவ விசாரித்து நிஷ்கர்ஷித்து இந்தத் தீபிகா மூலமாகவே உசித காலத்திலேயே கதஜல ஸேது பந்தமாக்காமல் ப்ரசாரப் படுத்தும்படி அடியேன் விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ

புஸ்தக விமர்சம்

(1)

"ஸ்ரீ தேசிக ஸ்துதி ரத்ந மஞ்ஜுஷை" என்றும், "ஸ்ரீ ஸூக்தி ரத்நமாலை" என்றும் பெயர் பூண்ட இரண்டு க்ரந்தங்கள் நாம் வரப் பெற்றோம். இவைகளுள் முதல் க்ரந்தத்தில், ஸ்ரீ தேசிகனுடைய மங்களாசாஸநம், ப்ரார்த்தநாஷ்டகம் முதலிய ஸ்தோத்ரங்களும் ஸ்ரீ தொட்டயாசார்யரால் அநுக்ரஹிக்கப்பட்ட "ஆசார்ய விம்சதி"யும், ஆசார்ய சம்புவிலிருக்கும் தேசிககத்யமும் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. இரண்டாவது க்ரந்தத்தில், ஸ்ரீ தேசிகனால் அருளிச் செய்யப்பட்டுள்ள ரஹஸ்ய க்ரந்தங்களிலிருந்து அநேக ஸ்ரீ ஸூக்திகள் எடுக்கப்பட்டு ஒரு மாலா ரூபமாகக் கோர்க்கப்பட்டிருக்கின்றன. முதல் புஸ்தகத்தின் விலை அணா '5; இரண்டாவதன் விலை அணா 6. ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடம், கும்பகோணம் என்னும் விலாசத்தில் இவை இரண்டும் க்ரயத்திற்கு அகப்படும்.

(2)

ச்ரௌதம்.

திவான் பஹதூர் ஸ்ரீ உ. வே. வி. கெ ராமாநுஜாசார்ய ஸ்வாமி, தம்மால் எழுதப்பட்டிருக்கும் "ச்ரௌதம்" என்னும் ஒரு க்ரந்தத்தை க்ருபையுடன் நமக்கு அனுப்பி இருக்கிறார். அதை நாம் மிக்க குதூஹலத்துடன் படித்தோம். உண்மையாகவே அது நன்றாக எழுதப்பட்டிருக்கிறது. மீமாம்ஸா சாஸ்த்ரத்தையும் ஸ்ரீபாஷ்யாதி வேதாந்த க்ரந்தங்களையும் படிக்க வேண்டுமென்னும் ஆவலுள்ளவர்களுக்கு, அது மிகவும் உபயோகமுள்ளதாயிருக்கும் என்பதில் ஆக்ஷேபமில்லை.

ஒவ்வொரு ப்ராஹ்மணனுலும் அவச்யம் அநுஷ்டிக்கப்படவேண்டியவைகளான அக்நிஹோத்ரம், தர்ச பூர்ணமாஸ இஷ்டி, அக்நிஷ்டோமம் என்னும் இம்மூன்று கர்மங்களைப் பற்றியே இது விசேஷித்து விவரிக்கின்றது. பசு யாகம் ஸோமயாகம் முதலிய மற்றை இஷ்டிகளும் ஆதாந சயநங்களும் ஸங்க்ரஹமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. உபோத்காதத்தில், 'தேவதைகள் என்பவர் உண்டா? அவர்களுடைய வ்யாபாரமென்ன?' என்பது முதலான விஷயங்களும், யாகம் செய்யவேண்டுவதின் ஆவச்யகதையும், வேதப்ராமாண்ய விசாரமும் தீர்க்கமாக விசாரிக்கப்பட்டிருக்கின்றன. தவிரவும் ஸமுத்ரயாநம், பஞ்சம ஸ்பர்சம், ருதுமதீ விவாஹம் முதலிய சில ஸாமாந்ய விஷயங்களும் விசாரிக்கப்பட்டு, இவை விஷயமாக நமது சாஸ்த்ரம் நிர்ணயம் செய்வது யாது என்பதும், இம்மாதிரியான அநுஷ்டாநங்களால் ஜகத்துக்கு எவ்வித ஆநுகூல்யமின்றிக்கு ப்ராதிகூல்யமே ஸம்பவிக்கும் என்பதும் நன்ருக வற்புறுத்தப் பட்டிருக்கின்றன. இந்த க்ரந்தம் எளிய தமிழில் எழுதப்பட்டிருக்கின்றது; முதலில் விஷய ஸூசிகையும் கடைசியில் விஷயங்களின் அகராதியும் அமைக்கப்பெற்றிருக்கின்றது. இதன் விலை தபால் கூலி முதலியது உள்பட ரூ 1-3-0. அபேக்ஷிப்பவர்கள், "திவான்பஹதூர் வி. கே. ராமாநுஜாசாயர், பெரியதெரு, கும்பகோணம்" என்னும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்

பதினெட்டாது வர்ஷத்திய அறிக்கை.

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் நிர்வாகக் கமிட்டியாரால் வேலூரில் நடைபெறவிருக்கும் மஹா ஸங்கத்தில் ஸப்யர்களுடைய அங்கீகாரத்திற்காகப் பின் வரும் அறிக்கை நிர்த்தேசிக்கப்பட்டிருக்கிறது.

ஸபை:—ஸப்யர்களின் ஸங்க்யையில் ப்ரஸ்தாப வர்ஷத்தில் விசேஷமாறுதல் இல்லை. மொத்த சந்தாதாரர்களின் தொகை 850. பதினேழாவது வருஷ முடிவில் 775 சந்தாதாரர்கள் இருந்தனர். கௌரவ அங்கத்தினர்கள் முன்போலவே 38 பேர்கள் இருந்தனர்.

வேதாந்ததீபிகை:—ஸ்ரீ உ. வே. ஸ்ரீ வாஸுதேவாசார்ய ஸ்வாமி 'தீபிகையின்' ஸம்பாதகராக இருந்து ப்ரஸ்தாப வருஷத்தில் தீபிகையை நடத்தி வந்திருக்கிருர். அந்த ஸ்வாமியின் வ்யாக்யாநத்துடன் ஸ்ரீ வேதார்த்த ஸங்கிரஹமும், ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளை, ஸ்ரீ உப. புத்தூங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி இவர்களுடைய வியாக்யாநத்துடன் ஜிதந்தே ஸ்தோத்ரமும் ப்ரஸ்தாப வர்ஷத்தில் தீபிகையில் வெளியிடப்பட்டு வந்திருக்கின்றன. தீபிகைக்கு அநந்ய ப்ரயோஜநமாக விஷய ப்ரதாநம்

230

செய்தும் அபிமானத்துடன் த்ரவ்ய ஸஹாயம் செய்துமுள்ள ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்தினருக்கு கமிட்டியார் தங்களுடைய ஹார்த்தமான க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

தெலுங்கு பத்திரிகை:—தமிழ் தேசத்திலேயே ஸபை ப்ரவிருத்தித்து தமிழ் தீபிகையை மாத்திரம் ப்ரசுரித்து வருவதாலும், ஆந்திர தேச ஆஸ்திக ஜனங்களுக்கு நம் ஸம்பிரதாய ஞானத்தை உண்டு பண்ணக்கூடிய ஸாதனங்க ளில்லாததாலும், தெலுங்கு பாஷையிலும் ஒரு மாஸ பத்ரிகை நடத்தவேண்டு மென்று ஆந்திர தேசத்திலிருந்த சில ப்ரபலர்கள் அபிப்பிராயப்பட்டதை யநுசரித்து நிர்வாஹக் கமிட்டியார் இவ்வருஷ ஆரம்பத்தில் 'வேதாந்த தீபிகா' என்று ஒரு மாஸப் பத்திரிகையை ஆரம்பித்தார்கள். ஆரம்பத்தில் இதற்கு அவர்களால் ஆதரவேற்பட்டதானுலும், ஆந்திர பிரதேசங்களில் தக்க பரிசயத்துடன் இதை விருத்தி செய்யப் போதுமான பேர்கள் முன் வராததால் அந்தப் பத்திரிகையை நடத்துவதற்கான பூர்ணஆதரவேற்படவில்லை. ஒரு வருஷத்திற்குள் ஆதரவேற்பட்டுவிடுமென்ற நம்பிக்கையுடன் அதில் ஸஞ்சிகைகள் ப்ரசுரிக்கப்பட்டன. இதில் எதிர்ப்பார்த்த ஆதரவு ஏற்படாததுடன் இதனல் ஸபைக்கு மிகுந்த த்ரவ்ய நஷ்டமுமேற்பட்டது. அதனல் முடிவில் இது நிறுத்தப்படவேண்டியதாயிற்று.

நிர்வாஹக் கமிட்டி:—இவ்வர்ஷத்தில் நிர்வாஹக் கமிட்டி எட்டு முறைகள் கூடி ஸபையின் நிர்வாஹக் காரியங்களைப் பற்றி ஆலோசனை செய்திருக்கிறது. வெகு காலம் கமிட்டியில் அங்கத்தினராக விருந்து ஸபைக்கு உபகரித்து வந்த ராவ் ஸாகிப் ஸ்ரீ. உப. டி. ராமாநுஜ அய்யங்கார் ஸ்வாமியின் நிர்யாணம் இவ்வருஷத்தில் நேர்ந்தது சோகிக்கக் கூடியதாகும். ஸ்ரீ. உப. நடாதூர் என். ஸ்ரீநிவாஸாசர்யர் ஸ்வாமி கமிட்டியில் ஒரு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார். ஆனல் சில அஸௌகர்யங்களால் அந்த ஸ்வாமி அந்த ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்து விட்டார். ஸ்ரீ. உப. கே. வி. கிருஷ்ணமாச்சார்யர் ஸ்வாமி பொக்கிஷதாரராக மதுராந்தகத்தில் ஏற்படுத்தப்பட்டார். ஆனல் அந்த ஸ்வாமியும் அக்காரியத்தை ஏற்றுக்கொள்ள ஸௌகர்யப்படாமற் போகவே அவர் அதை ராஜிநாமாச் செய்து விட்டார். பிறகு அந்த ஸ்வாமி கமிட்டி அங்கத்தினராக கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வியாஸ ஸம்மாநம்:—பந்தர் ராவ்ஸாகிப் ஸ்ரீ உப டி. எஸ். ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமி ஸ்ரீ ஆதிவன் சடகோப யதீந்திர மஹாதேசிகன் ஸம்மானத்தைக் குறித்துச்செய்துவரும் த்ரவ்ய ஸஹாயத்தைக்கொண்டு "ஸ்ரீபாஷ்யகாரரும், ஸ்ரீகண்டரும்" என்றவிஷயமாக வியாஸம் தருவிக்கப்பட்டு இதற்கு விஷயப்பிரதானம் செய்த ஸ்ரீ உப வித்வான் புத்தங்கோட்டஹம் ஸ்ரீநிவாசார்ய ஸ்வாமிக்கும் ஸ்ரீ உப வித்வான் தோட்டாலம் வேணுகோபாலாசாரிய ஸ்வாமிக்கும் ஸம்மாநங்கள் கொடுக்கப்பட்டன. இந்த ஸ்வாமிகள் அனுப்பிய விஷயம் மஹாமஹோபாத்தியாய ஸ்ரீ உப வித்வான் கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமியால் பரிசோதிக்கப்பட்டு ஸம்மாநிக்கக் கூடியவையென பஹுமானிக்கப்பட்டவை.

ஸபையின் உப அத்யக்ஷர்களில் ஒருவரான கமலாபுரம் ஸ்ரீ உப ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியின் த்ரவ்ய ஸஹாயத்தைக்கொண்டு "ஸ்ரீ தேசிகன் கவிதையும் தத்வவிசாரமும்" என்ற விஷயமாக ஸ்ரீஉப வித்வான் தட்டை ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமி

அனுப்பிய விஷயத்திற்கு ஸம்மாநம் செய்யப்பட்டது. இந்த விஷயம் ஸ்ரீ உப எ. வி. கோபாலாசார்ய ஸ்வாமியால் பரிசோதிக்கப்பட்டது. ஸம்மாநிக்கக் கூடியதென பஹுமானிக்கப்பட்டது.

வார்ஷிக மஹா ஸங்கம்:—ஸபையின் 17-வது வார்ஷிக மஹா ஸங்கம் 1928-ம் வர்ஷம் ஏப்ரல் மாதம் 21, 22-ந் தேதிகளில் ஸ்ரீ மதுராந்தகத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. ஸ்ரீ உப. வித்வாந் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி அக்ராஸநம் வஹித்து மஹா ஸங்கத்தை நடத்தினர். பல வித்வான்களைக் கொண்டு அரிய உபந்யாஸங்கள் செய்யப்பட்டன.

கணக்குப் பரிசோதனை:—இந்த வர்ஷத்தின் கணக்குகளைப் பரிசோதிக்க ஸ்ரீ. உ. வே. ஸ்ரீ நரஸிம்ம ராகவாசார்ய ஸ்வாமியைக் கமிட்டியார் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்த ஸ்வாமி கணக்குகளைப் பரிசோதித்து தமது அறிக்கையையும் அனுப்பியிருக்கிறார். இந்த ஸ்வாமிக்குக் கமிட்டியார் தங்கள் க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர். முந்திய வர்ஷம் போல் இந்த வர்ஷமும் சந்தாவில் விசேஷமாக பாக்கி ஏற்பட்டுள்ளது. இதனால் ஸபைக்கு விசேஷ அர்த்த சிரமமு மேற்பட்டிருக்கிறது. அப்படி பாக்கி வைத்திருக்கும் சப்யர்கள் க்ருபையுடன் சந்தா பாக்கியை அனுப்பத்திருவுள்ளம்பற்றினால் நிரம்பவும் சௌகர்யமாக விருக்கும்.

இந்த ஸபையின் அபிவிருத்தியில் ச்ரத்தாளுக்களாய் அநேகவிதமாக உபகரித்த எல்லா ஸ்வாமிகளுக்கும் ஸபையார் தங்கள் க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

ஸம்ப்ரதாய புஸ்தகங்கள்:—தீபிகையில் க்ரமேண ப்ரசுரிக்கப்பட்டு ஸ்ரீ ஆளவந்தார் ஸ்தோத்திரம், ஸ்ரீ ஜிதந்தே ஸ்தோத்ரம் முதலியவற்றில் அதிகப்படியாகத் தனியே 500 பிரதிகள் அச்சடிக்கப்பட்டு அவை விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன.

கணக்குப் பரிசோதகரின் அறிக்கை.

1928-ம் வருஷம் ஸெப்டம்பர் மாஸம் 30-ந் தேதியோடு முடிவான ஸபையின் 18-வது வர்ஷத்திய கணக்குகளைப் பரிசோதித்தேன். வரவு செலவு கணக்குகள் ஸரியாய் வைக்கப்பட்டிருக்கின்றன. மாஸாந்தர வரவு செலவு கணக்குகள் ஸரியாய் இருக்கின்றன.

டி. நரஸிம்ம ராகவாச்சாரியர்,

திருவல்லிக்கேணி

வரவு.

முன் இருப்பு	* 1396	15	3
சந்தா	1795	13	0
புஸ்தக விற்பனை	15	6	0
நன்கொடை	15	0	0
மொத்தம் ரூ.	3223	2	3

செலவு.

அச்சுக் கூலியும் காகிதமும்	1808	13	0
தபால் சார்ஜ்	325	5	6
வித்வான்களுக்கு ஸம்மானம்	250	0	0
புரூப் பரிசோதகர்	77	0	0
குமாஸ்தா சம்பளம்	120	0	0
ப்ளாக் தயாரித்தது	24	0	0
பிரயாணச் செலவு வண்டிச் செலவு	44	11	6
உபந்யாஸ நிதி	115	0	0
ஸ்டேஷனரி முதலிய சில்லரைச் செலவு	28	1	0
விளம்பரச் செலவு	16	0	0
	2809	9	0
கையிருப்பு	413	9	3
மொத்தம் ரூ.	3223	2	3

எஸ் கோபாலஸ்வாமி அய்யங்கார்.

எஸ் லக்ஷ்மிநரஸிம்மாசார்யர்.

காரியதர்சிகள்.

---

* சென்ற வருஷம் அச்சுக்கூலி செலவு ரூ 1302—2—5-க்கு பதிலாக ரூ 1296—6—3 என்றும், ப்ளாக் தயாரித்த செலவு 28-க்குப் பதிலாக ரூ 13-12-0 என்றும் அச்சிட்டபடியால் வருஷ முடிவில் கையிருப்பு ரூ 1396—15—3-க்குப் பதிலாக ரூ 1416—15—3 என்று தவறாக அச்சிடப்பட்டு விட்டது.

233

ஸ்ரீ

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் பத்தொன்பதாவது.

வார்ஷிக மஹாஸங்கம்.

திருவல்லிக்கேணி
சுக்லஞூ ஆனிமீ 21வ

தாஸர்களுடைய விஜ்ஞாபனம்.

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் பத்தொன்பதாவது வார்ஷிக மஹாஸங்கத்தை ஸ்ரீ பாகவதோத்தமர்களுடைய நியமநத்தை முன்னிட்டு காவேரி தீரத்திலுள்ள வேலூரில் (சேலம் ஜில்லா) நாளது ஆனிமீ 26, 27ங் தேதிகளில் (ஜுலை 9, 10) நடத்துவதாக நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறது. மஹாமஹோபாத்யாய பண்டிதரத்நம் ஸ்ரீ உப. லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி அக்ராஸநம் வகிக்கத் திருவுள்ளம்பற்றியிருக்கிறார். யதாபூர்வம் பண்டிதர்களின் உபந்யாஸம் அப்பொழுது நடைபெறும். ஸகல ஸ்ரீ வைஷ்ணவ ஆஸ்திக சிரோமணிகளும் அக்காலத்தில் எழுந்தருளியிருந்து ஸதஸ்ஸை ஸ்ரீ சரண்யன் திருவுள்ளம் உகக்கும்படி நடத்திவைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

கே. டி. பார்த்தஸாரதி அய்யங்கார்
ஸத்காரகர்.

எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார்,
எஸ். லக்ஷ்மி நரஸிம்மாசார்யர்,
கார்யதர்சிகள்.

ஸ்ரீ:

சுக்லஹூ ஆனிமீ 26வ செவ்வாய்க்கிழமை.

காலை 11 மணி முதல் 5 மணி வரையில்

1. அக்ராஸகாதிபதியின் உபந்யாஸம்
2. ஸ்ரீ உப. வித்வாந் கோஷ்டிபுரம் ஸௌம்யநாராயணா சார்ய ஸ்வாமியின் உபந்யாஸம்
3. ஸ்ரீ உப. எ. வி. கோபாலாச்சார்ய ஸ்வாமியின் உபந்யாஸம்
4. ஸ்ரீ உப. வித்வாந் காரப்பங்காடு வெங்கடாச்சார்ய ஸ்வாமியின் உபந்யாஸம்.
5. ஸபா ஸம்பந்தமான கூட்டம்.

ஆனி மீ 27வ புதன்கிழமை.

காலை 8-மணி முதல் 11-வரையில்

1. ஸ்ரீ உப வித்வாந் புத்தங்கோட்டஹம் ஸ்ரீநிவாஸாச்சார்ய ஸ்வாமியின் உபந்யாஸம்
2. ஸ்ரீ உப. வித்வாந் கோஷ்டிபுரம் தேசிகாசார்ய ஸ்வாமியின் உபந்யாஸம்.
3. தட்டை ஸ்ரீநிவாஸாச்சார்ய ஸ்வாமியின் உபந்யாஸம்.

மாலை 2-மணி முதல் 5-மணி வரையில்

1. ஸ்ரீ உப. வித்வாந் உத்தமசேரி ரெங்காசார்ய ஸ்வாமியின் உபந்யாஸம்.
2. வித்வத் ஸம்பாவனை.